# தமிழன் நினைவு




கவிஞர் திக்கவயல் . சி. தர்மு

## தகவுரை

இத் தொகுதி பற்றிய எனது அவதானிப்புகள் சிலவற்றைக் கூற முற்படுகின்ற இந்த நிமிடங்கள் எனக்கு சந்தோசமாக உள்ளன. திக்கவயல் தர்மகுலசிங்கமும் நானும் முன்பு பல்கலைக்கழகத்தில் சகபாடியாக இருந்தவர்கள். என்பதே அதற்கு காரணம்! அதனால் அத்தொகுதியின் குறைகள் பற்றிச் சுட்டிக்காட்ட சற்றுத் தயக்கமாக உள்ளது. இக்கட்டான இந்நிலையில் முதலில் இத்தொகுதியின் உள்ளடக்கம் பற்றிக் கூறவேண்டியது அவசியமாகின்றது.

இத் தொகுதியில் உள்ள கவிதைகளில் சில அன்றாடம் எமக்கு ஏற்படும் மிகச்சாதாரண அனுபவங்கள் பற்றியன. (எடுத்துக்காட்டு; ஒழித்தல்) அதேவேளையில் சமகால அரசியல் நிலைமைகளும் தனிப்பொருளாயுள்ளன. (எ-டு) ஒரு கிழமை முந்தித்தான்) ஆக, இத்தொகுதியிலுள்ள கவிதைகள் எல்லா விடயங்கள் பற்றியும் பேசுகின்றமை முதற்கண் விதந்து உரைக்கப்படவேண்டியது.

தவிர, மரபார்ந்த விடயங்கள் கூடப் புதுமையான முறையில் அணுகப்படுகின்றன; புதுவருடம் பற்றிய, பொங்கல் பற்றிய கவிதைகளை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்

ஆங்காங்கே புரட்சிகரமான முற்போக்கான, உன்னத இலட்சியங்கள் கொண்ட கவிதைகளும் அபூர்வமாக இடம் பெற்றுள்ளன. இவ்விதத்தில் எனக்கு நன்கு பிடித்தமானதும் இத்தொகுதியிலுள்ள சிறந்த கவிதையாக உள்ளதுமான 'இனி ஒரு விதி செய்வோம்' என்ற கவிதையின் ஆரம்ப பகுதியை இங்கு எடுத்தாள்வது பொருத்தமானது.

உலகமொழி அத்தனையும்
ஓரமதில் சேர்ப்போம் - இனி
உலகமொழி மௌனம் என
உலகினிலே சொல்வோம்.

உலக மதம் அத்தனையும்
வேலி மதில் சாய்ப்போம் - இனி
உலகமதில் மனிதம் என்ற
புதிய மதம் செய்வோம்.

தருமம் அதைச் சூது கவ்வும்
வாழ்வதனைக் கொல்வோம்
தருமமதைத் தருமம் கவ்வ
வேண்டுமெனச் சொல்வோம்!

உத்தியோக மொழியென்று
எதனையுமே சொல்லோம்.
சத்தியமாய் அன்பு மொழி
அகில மதில் செய்வோம்.

குறிப்பிட்ட சொற்தொடர்களைக் கவிஞர் தானே தெரிந்தெடுத்துக் கொண்டு தனது கற்பனையையும் பன்முக வாசிப்பையும் மூலதனமாகக் கொண்டு ஆக்கியுள்ள வித்தியாசமான கவிதைகளும் இத்தொகுதியில் நிரம்பக் காணப்படுகின்றன. எ-கு 'இலக்கியச்சட்டம்' 'பொட்டிடுங்கள்- பொட்டிடுங்கள்' 'காதல்' 'திறவுகோல்' இவை வாசிப்பதற்குச் சுவாரஸ்யமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வாழ்க்கை பற்றிய தத்துவ வார்த்தை நோக்கிலான கவிதைகளும் இத்தொகுதியில் கணிசமாக உண்டு. கண்ணதாசனது கவிதைகளை நினைவூட்டும். இவையும் சாதாரண வாசகரை கவரக் கூடியனவே. இவ்வாறெல்லாம் சிந்திக்கும் போது சாதாரணமான வாசகர்களை மிக எளிதாகக் கவரக்கூடிய ஜனரஞ்சகமான பண்புகள் இத்தொகுதியில் உள்ள கவிதைகளில் மலிந்து காணப்படுகின்றன உண்மையும் புலப்படுகின்றது. இதற்காகக் கவிஞர் பல உத்திகளைக் கையாங்வதும் கடிதபாணி அங்கதநோக்கு, பேச்சுமொழிப் பிரயோகம் புதுமையான உவமைகள், முதலியன மனம் கொள்ளத்தக்கது ஒரு கவிதையிலே இப் பண்புகள் விரவி வருவதுமுண்டு.

எ-டு **'எங்கள் எம்.பீக்குப் பகிரங்கக்கடிதம்'**

அன்புள்ள அண்ணர் நீங்கள்
பா.உ.வாய்ச் சென்று பல நாட்கள்
என் வீட்டில் அயல்வீட்டில் அடுத்தஊரில்
ஒட்டத்தந்த போஸ்டர் இன்னும் கிழியவில்லை.
ஆனாலும் நீங்கள் வளர்த்து விட்ட
கொள்கையெல்லாம் கிழிஞ்சு போச்சாம்!
ஊராக்கள் சொன்னாங்கள் அவசர காலச்
சட்டத்திற்கு நீங்களும் ஓத்தாதல் தானாம்.

வீட்டு மதிலில் ஒட்ட என்று சொல்லி
கட்டுப் போஸ்டர் தந்தீங்க தானே....
அதில் சிலதில் சாணி அடிசிற்சிலதில்
ஆடுமாடு இழுத்தெறிந்த விழுப் புண்கள்.

புதுமையான உவமைகளும் எடுத்துக்காட்டாகப் பின்வரும் பகுதிகள் அமைகின்றன.

வானத்தீர் என்ன உங்கு
விட்டு விட்டு மின்னுகுது
ஆனந்தன் கராச்சினிலே
வெல்டிங்கு செய்தது போல்!

வானத்தீர் என்ன உங்கு
பத்திப்ப பத்தி நூர்கிறது?
ஈழ நாட்டின் மின் வெட்டு
உவ்விடத்தைச் சேர்ந்ததுவோ?

ஆக, வெம்மையானதும், தண்மயானதும், உறைப்பானதும், இனிப்பானதுமான விசயங்கள் சுவாரஸ்யமான முறைகளில் இத்தொகுதியில் உள்ள கவிதைகளில் இடம்பெற்று உள்ளன என்பேன்.

இனிசங்கடமான விடயங்கள் பற்றி - அதிகமில்லை, ஒன்றுதான் கூற வேண்டிய நிலை எனக்கு ஏற்படுகிறது? இவ்விதத்தில் இங்குள்ள கவிதைகளின் வெளிப்பாட்டு முறை எத்தகையது? வடிவம் எத்தன்மையது? என்ற கேள்வியைக் கேட்கத் தோன்றுகின்றது

நவீன கவிதை பல்வேறு வெளிப்பாட்டு முறைகளை - வடிவ முறைகளைக் கொண்டுள்ளமையாமறிந்ததே! அவை பாரதியார் பாணி திருச்சிற்றம்பலக் கவிராயர் பாணி, பிச்சமூர்த்தி பாணி, மகாகவி பாணி, நுஃமான் பாணி, சோலைக்கிளி பாணி, சேரன் பாணி, ஆத்மா பாணி, அமரதாஸ் பாணி எனப் பல்வகைப்படுவன.

அவை ஒவ்வொன்றுமே தனித்துவமான பண்புகள் கொண்டவை, கவிதைகளாக விளங்குபவை. ஆயின் இத்தொகுதியில் உள்ளவை எந்தப் பாணியிலும் அடங்காதவை இனிமேல்தான் கவிதைகளாக மலர வேண்டிய நிலையில் உள்ளவை.

எனினும் இக்குறைபாடுகள் பற்றி நண்பர் அதிகம் விசனிக்க வேண்டியது இல்லை கணனி யுகமான இன்று வெளிவரும் தொகுதிகளில் கணிசமானவை அத்தகையவே கவிதை பற்றி கணிசமான விமர்சனங்கள் வெளிவராத நிலையில் விமர்சனமும் பரந்துபட்ட வாசிப்புமே அதில் இருந்து மீட்சி பெற வழிவகுக்கக் கூடியன. எனது

*நண்பரிடமும் அத்தகைய இயல்புகள் உண்டு என்பதனையானறிவேன். இத்தியாதி குறைபாடு அடுத்துவரும் தொகுப்புகளிலே நீங்குமென எதிர்பார்க்கிறேன்*

ஆசிகளுடன்


*கிழக்குப் பல்கலைக்கழகம்*
*செங்கலடி*
*17-05-2002*

கலாநிதிசெ. யோகராசா
தலைவர்
மொழித்துறை



| | | |
|---|---|---|
| **நூலாசிரியர் முழுப்பெயர்** | :- | **சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம்** |
| **நூல்** | :- | **தமிழன் நினைவு** |
| **நூலாசிரியரின் வேறு புனைப் பெர்கள்** | :- | **திக்கவயல்,பாணபத்திரன் அம்பலம், இந்திரசித்து, ஆணி முத்தன்.** |
| **பக்கங்கள்** | :- | **128** |
| **அச்சுப்பதிப்பு** | :- | **வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி மட்டக்களப்பு** |
| **பிரதிகள்** | :- | **1000** |
| **வெளியிட்ட திகதி** | :- | **2002-10-10** |
| **பொருள்** | :- | **கவிதை** |
| **விலை** | :- | **ரூபா 200.:.-** |

பொருளடக்கம் [கவிதைத் தலைப்பு] | பக்கம்


| [கவிதைத் தலைப்பு] | பக்கம் |
|---|---|
| 01. ஆசை ஆசை ஆசை | 03 |
| 02. கனத்தையில் ஊதிய.... | 05 |
| 03. கலுத்துரை கைதியின்... | 09 |
| 04. பிள்ளை அழுகுது .... | 13 |
| 05. போனேன் போனேன் | 14 |
| 06. புது வருட சபதங்கள் | 15 |
| 07. உனக்காக எழுதுகிறேன் | 17 |
| 08. ஒழித்தல் | 18 |
| 09. செய்யாதே செய்யாதே | 20 |
| 10. கண்டுபிடிப்பு | 22 |
| 11. நீ நீ... | 23 |
| 12. ஆயுள் முடிகின்றது | 24 |
| 13. பஞ்சப்பூ | 26 |
| 14. வேண்டும் பலபிறவி | 27 |
| 15. அன்னை பூபதிக்கு ..... | 29 |
| 16. சமாதனச் சித்திரையே ... | 31 |
| 17. வந்து சேர்ந்ததே ...... | 33 |
| 18. இலக்கியச்சட்டம் | 35 |
| 19. ஒரு கிழமை முந்தித்தான் | 38 |
| 20. நில் என்ற சமாதானம் | 39 |
| 21. பொட்டிடுங்கள் .... | 42 |
| 22. ரயில் ஓடும் வேளையிலே..... | 44 |
| 23. இனி ஒரு விதி செய்வோம் | 48 |
| 24. காதல் | 50 |
| 25. கண்ணாடிக் கவிதை | 52 |
| 26. வேண்டும் ஒரு மனைவி | 56 |
| 27. போதுமையா இந்தக் கொடுமை | 60 |
| 28. எங்கள் எம்பிக்கு..... | 63 |
| 29. தாஜ்மகாலின் எச்சரிக்கை | 64 |
| 30. சமாதானமானது | 65 |
| 31. நானும் ஒரு கவிஞன் | 67 |
| 32. திறவு கோல் | 68 |

[கவிதைத் தலைப்பு] பக்கம்


| | |
|---|---|
| 33. காலம் மாறலாம் ...... | 71 |
| 32. இப்பவும் நான் | 72 |
| 33. உறவுகள் | 74 |
| 34. சவூதிக்கு ஒரு கடிதம் | 76 |
| 35. அன்பு மனைவிக்கு ஒரு ... | 78 |
| 36. இன்று மே தினம் | 80 |
| 37. பேனாவே | 83 |
| 38. சந்தியில் | 84 |
| 40. வண்டொன்று வந்தது | 86 |
| 41. சாத்தியப்படாது | 87 |
| 42. எப்பக்கம் | 88 |
| 43. வாங்கையா வாங்க(ா) | 90 |
| 44. இது என்ன உலகம் | 92 |
| 45. வெற்றிக்கொடி | 93 |
| 46. என்ன பொருத்தம் | 95 |
| 47. வாழுகின்றோம் | 96 |
| 48. இல்லை.. இல்லையில்லை | 98 |
| 49. அச்சொட்டா | 100 |
| 50. ஆடும் ஆடும் | 101 |
| 51. இன்றைய முன்றில் | 103 |
| 52. வரவே இல்லை | 103 |
| 53. என்ன குறை ...... | 105 |
| 54. வானத்தீர் என்ன .... | 107 |
| 55. எழுதியவைகள் | 111 |
| 56. ஆண்டவன் வேண்டாம் | 115 |
| 57. சூரியர்க்கு அனுப்பிடுங்கோ | 117 |
| 58. அன்றொரு நாள் கவிஞனாக... | 119 |
| 59. தமிழன் நினைவு | 123 |
| 60. பறக்கும் தட்டு | 127 |
| 61. போர்வை | 128 |

# என்னுரை

நான் எனது ஆரம்ப எழுத்துலகில் கவிஞனாக இருக்கவில்லை. ஒரு நகைச்சுவை எழுத்தாளராகவும்,மேடைப்பேச்சாளராகவும் வளர ஆரம்பித்தேன்.1965ஆம் ஆண்டினிலே இத்துறையில் என்னை ஊக்குவித்தவர் மாமனிதர் சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம் அவர்களாகும்.வேகமாக வளர ஆரம்பித்த என்னை ஈழநாடு,வீரகேசரி,ஈழமுரசு,போன்ற பத்திரிகைகள் ஆசிரியர் பீடத்தில் அமர்த்திப் பதவிகள் தந்தன.இக்காலக்கட்டங்களில் ஞாயிறு பத்திரிகைகட்கும் சேவை செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அக்கால கட்டத்தில் நல்ல கவிஞர்களின் கவிதைகளைத் தரம் பிரித்துப் போடுவதும் எனது வேலையானது. நல்லன இல்லாதவிடத்து அல்லனவும் பெருமளவில் இடம் பிடித்தன. இது பக்கத்தை நிரப்பும் பம்மாத்து வேலை எனத் தெரிந்தும் செய்து வந்தேன்.

இந்நிலையில் நானும் கவிதை எழுத வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் வேரூன்றி வளர்ந்தது.

அதன் தொடர்ச்சியாக நானும் கவிதைகளைப் படைக்கத் தொடங்கினேன்!

'யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையில் வேலை செய்தபோது சில நாட்கள் கோட்டை முகாமைச் சுற்றி இராணுவத்துக்கும்-புலிகட்கும் போர் நடக்கும்.மார்செட்டி விமானங்கள் குண்டு போடும்.இந்நிலையிலும் பல நாட்கள் இரவில் ஒரு மணிக்குக் கூட விழித்திருந்து பத்திரிகையாளர் பணி நடக்கும்.இந்நிலையில் கூடச் செய்திகள் கொடுப்பதுடன்,கவிதைகளும் எழுதி வைத்து ரசிப்பது எனது தொழிலானது.அவ்வாறு எழுதிய சில மன உணர்வுக்கவிதைகளைக் கீழே தருகிறேன்.

பானைகளைப் பூனை
தழுவும் நேரம் - காவலர்கள்
கடமையினை நழுவும் நேரம்
நல்ல கவிதை வருமெனக்கு

சிங்கமும் புலிகளும் கைகள் கோர்த்து
பங்கமின்றிச் சுயாட்சி-வந்தால்
கவிதைகளில் முத்தமிடும் நல்ல
கவிதை வருமெனக்கு!

இப்படிப் பல.இந்தச் சம்பவங்களின் ஆண்டு-1987.

இதன்பின்பு எனது கவிதைகள் தினகரன்,வீரகேசரி,தினக்குரல்,தினமுரசு தினக்கதிர்(மட்டக்களப்பு)ஆகிய பத்திரிகைகளில் தொடர்ந்து வந்தன.பல்வேறு இடங்களிலும் நான் நடத்திய கவியரங்குகள் என்கவிதை ஆர்வத்தை வெகுவாகவே தூண்டிவிட்டன.மகாஜனங்கள் தந்த ஆதரவு என்னைக் கவிதேசம் என்ற கவிதைச் சஞ்சிகையை நடத்தும் அளவுக்கு உயர்த்திவிட்டது; உண்மையிலும் உண்மை.
திருமறைக்கலாமன்றம்,கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஆகியன நடத்திய கவியரங்குகளில் என்னை அவர்கள் வரவழைத்து சபைகளில் முதன்மைப்படுத்தியது எனது மனதில் ஆழமாக வேரூன்றி உள்ளது.
இலக்கணப் புலமை மிகு கவிஞன் நான் அல்ல;எனது உணர்வுகள் ஏதோ ஒரு வடிவில் பிறக்கின்றன.அதனை நிகழ்காலத்தில் வாழும் தமிழில் சொல்லப் பேனாவை நான் எடுத்தேன்.வெற்றி பெற்றுள்ளேனா என்பதை வாசகர்களே தீர்மானிக்கவேண்டும்.
சமீபத்தில் ரவி தமிழ்வாணன் மட்டக்களப்புக்கு வந்திருந்தார்.அவரை வாழ்த்தும் ஒரு கவிதையைச் சபைக்கு நான் எடுத்துச் சென்றிருந்தேன். அக்கவிதையைப் பற்றி ரவிதமிழ்வாணன் பின்வருமாறு கூறினார். "திக்கவயல் தர்முவின் கவிதை மரபுக் கவிதையும் அன்று; புதுக்கவிதையும் அன்று; அது உணர்வினால் உந்தப்பட்ட மறக்க முடியாத ஒரு கவிதை" என்றாரே... அது ஒன்றே எனது கவிதைகட்கான மதிப்புரையாக நான் கருதுகிறேன்.
என்னை இத்துறையில் ஊக்கிவித்த மகாஜனங்களுக்கு எனது நன்றியைக் குறிப்பிட்டு எனது கவிதைகளைக் காண உள்ளே அழைக்கின்றேன்.

அன்பின் கவிஞர் திக்கவயல் தர்மு
ஆசிரியர் (கவிதேசம்)
22.12.2002

# ஆசை ஆசை ஆசை

கோழியொன்று குடை பிடிக்க
ஆசை கொண்டு ஆடினால்
பீழி போன்ற தன் அலகினாலே
விரித்துத் தூக்க முடியுமா?

காகம் போலக் கூடமைத்துக்
குரங்கு வாழ விரும்பினால்
விவேகம் என்ற மூளை வந்து
குரங்கைத் தாங்க வேண்டுமே!

காகம் ஒன்று மனிதன் போல
சிரிக்க விரும்பி உன்னினால்
வாயைத் திறந்து சிரிப்பதற்கு
பல்லு வேண்டும் அல்லவா?

நெட்டையாக வளர்ந்து விட்டால்
பெட்டை எல்லாம் கூவுமோ?
செட்டை இல்லாத பெண் மயிலு
எந்த நாளில் ஆடுமோ?


கரு இல்லாத 'பாம்' முட்டை
குஞ்சு ஒன்றைப் பொரிக்குமோ?
உரு இல்லாத மனிதர்களால்
உலக சமத்துவம் ஓங்குமோ?

வீரம் உழக்காத புவியுலகில்
வீர சுதந்திரம் பூக்குமோ?
சேறு உழக்காத நெல்வயலில்
சோறரிசி தேறுமோ?

வண்டியை இழுக்கும் மாடு
வண்டில்காரனை எதிர்க்குமோ?
மூக்கிலே இழுக்கும் கயிறு-அது
முதலாளி பக்கம் அல்லவோ?

மண் உண்ணிப் பாம்புக்கு
மண்ணில் கீழ் வாழ்வு
மரங்கொத்திப் பறவைக்கு
மரத்தின் மேல் வாழ்வு

கார்த்திகைப் பூவுக்கு
ஒரு மாத வாழ்வு-இதை
உணர்ந்த பேர்கட்கு
உண்டாகும் இன்பவாழ்வு



# உடன் பிறப்புக்கு கண்ணீர் அஞ்சலி



## கனத்தையில் ஊதிய பூங்காற்றே கினாலியை நோக்கிக் கடந்து செல்வாய்!

அம்மா அப்பா தங்கை தம்பி எப்படிச் சொல்வேன்
எப்படிச் சொல்வேன்.
இனத்தை மறந்து இனசனத்தை மறந்து
எங்கள் அக்கா இறந்து போனாள்
கனத்தையில் ஊதிய பூங்காற்றே,அனல்காற்றே;
எங்கள் கதையினை எடுத்துச் செல்வாய்

அன்னலட்சுமி இவள் பெயராம்
பொன்னுங்கண்டென உரைத்தனர் ஊரார்
சிதம்பரப்பிள்ளை தகப்பன் பெயராம்
செல்லக்கண்டென அவரை அழைப்பர்
மயிலுப்பிள்ளை தாயின் பெயராம்
'திக்கவயல்' தம்பியின் நாமம்
அன்பால் அழைக்கும் சந்திரா தங்கை
அவளுக்கு இளையவன் ரவி எனும் தம்பி

கனத்தைச் செய்தி அவர்கள் அறிந்தால்
கடிதெனத் தமது உயிரினை விடுவர்
கனத்தையில் ஊதிய பூங்காற்றே - நீயும்
மெல்லென வடக்கே கிளாலியில் செல்க.

வானொலிச் செய்தியில் கொடுத்தோம் அன்று
பட்டரி இன்மையால் கேட்டிலர் யாழவர்.
திக்கமே எமது சொந்த ஊரு
அங்கே சென்றொரு செய்தி சொல்லு.

பிரான்ஸ் செல்லும் விசாவினைப் பெற்று
நான்கு பிள்ளைகள் கூடவே சகிதம்
செல்லும் வேளையில் கணக்குக் கேட்டான்
கனத்தைக் காவலன் கரியவன் அன்று.

அம்மா அறிவது,அப்பா அறிவது
வந்த வழியில் அனாதையாக அக்கா
உடலும் எரிந்திடவில்லை!
உங்கு இல்லா உறவினர் எல்லாம்
உரிமையோடு கூடினர் இங்கே!

கனகம்மா என்ற ஆருயிர் ரீச்சர்
அழுத ஒலிகள் கனத்தையில் கனத்தது.
கனத்த அழுகையில் மேகங்கள் சூழ்ந்து
வானகம் அன்று அழுதது அம்மா.

சத்திரந்தைப் பாலன் அண்ணா மங்கையற்கரசி
சுங்கத் திணைக்களப் பொன்னையா மச்சான்,
நாகரத்தினம் அழுத அழுகையால்
கூடியிருந்தோர் குழறி அழுதனர்!

அம்மா,அப்பா

சின்னஅண்ணன் மகனார் கந்தசாமி அவர்கள்
பொற்சுண்ணப் பாடல் பாடிய நீர்மை- கண்டு
அழுத கண்கள் ஆயிரம் என்று
பூங்காற்றே அங்கு எடுத்துச் சொல்லு!

அன்பாய் வாழ்ந்த தங்கராசா மாமா
புதல்வியர் அங்கே குழறி அழுதனர்
அத்தான் தங்கை வதனி அழுகையால்
வந்தவர் யாவரும் வாடி அழுதனர்

கிளாலியில் காற்றுடன் போகும்
வள்ளத்தில் செல்லும் எம்மினச்சோதரே
இந்தச் செய்தி வவுனியா வரை
வந்து சேர்ந்தால்
திக்கம் வரையில் எடுத்துச் செல்க

புளியடித் தருமன் வந்ததைக்கூறு!
அன்பின் தங்கை நந்தா வந்ததை அங்கே கூறுக
தமிழரசு சின்னத்துரை,ராஜாமாமா,தேவன்அண்ணா
தேம்பி அழுததை அங்கே சொல்லு!

அரியம் தம்பி தவரத்தினம்,அயல்வீட்டு
ஆழ்வாப்பிள்ளை வந்ததைச் சொல்க
தங்கி இருந்த விடுதி தன்னில்
தங்கி இருந்த ராஜன் அண்ணா

காரினைத் தந்து உதவிய செய்தி
தங்கை விக்கினேஸ் சுரேஸ் என்றொரு
உறவினர் அல்லா உறவினர் செய்த உதவியை அங்கே
தவற விடாது சொல்லிடு;சொல்லிடு

மேற்க்கிலே செல்லும் பூங்காற்றே
இவளின் கணவர் ஆருயிர்க் கணவன்
பிரான்சில் உள்ளார்
அன்பு மனைவி பிரிந்த செய்தியை வினயமாய்ச் சொல்லு
பிள்ளைகள் இருப்பதாய்ச் கூறுக

அன்னலட்சுமி ஒரு ரீச்சர் அறிவீர்
அருந்தமிழ் ஆங்கிலம் சரிவரக்கற்ற
புலமையின் பெட்டகம்
ஆயிரக்கணக்கான மாணவத்தாயின்
மரண வரலாறு இது என அறிந்திடு.

களுந்தம்போர் என்றொரு சுடலை உண்டு
அங்கே ரீச்சர் இறந்ததைச் சொல்லு.
பாரிசவாதத்தால் எழும்பாதிருக்கும் என் தந்தை காதில்
எப்படிச் சொல்வாய் ஏதும் அறியேன்!

## அன்பு அக்கா அன்பு அம்மா

உனது வாழ்வே பெருந்தோப்பு
அதுவே எமது பெருங்காப்பு
உமது சாவே சுடுகாடு
இனியும் எம்மைச் சுடுமோ இடுகாடு!

ஓம்சாந்தி

# களுத்துறைக் கைதியின் கவிதை இது

வீதிகளில்,வீடுகளில்,நகரமதில் ஒலி எழும்
சேதியெல்லாம் கேட்கிறது எமக்கில்லை!
மற்றவர்க்குப் போராடி உற்றவர்க்குச் சேறாடி
உறங்குமெங்கள் உள்ளமிங்கு

பழமரங்கள்,பூமரங்கள்பூக்காதிங்கு!
கழுமரங்கள்,விழுகிழங்கள் அழுவதிங்கு!!
அழகொழுகும்,விழிகளிங்கு,பொங்குமிங்கு!!?
நாம் தமிழர் தத்துவங்கள் விடியுமிங்கு.!!

களுத்துறைகள் பூசா,வெலிக்கடைகள் பூக்குமிங்கு!
கிழக்கு வெளிக்குமென்று இளந்தமிழர் பார்க்குமிங்கு!
கிழக்கு வெளிக்குமுன்பு குயிலினங்கள் கூவுமிங்கு!?
விடுதலைகள் எப்போ? தமிழிளைஞர் ஏங்குமிங்கு!!

காலைளிலே தேநீர் வருவதிங்கு!!
கைதிகளே இதற்குக் காவலிங்கு!!
காற்சட்டைக் கைதியின் கையிலே பீடிகள் கொடுத்திங்கு
எனக்கு உனக்கு எனப்பேணிகள்
பிடிப்போம் ஈங்கு

குடைக்கம்பி அடித்துச்சீறிப் பழஞ்சீலைப்
பொறியினிலே நெருப்பெழுப்பி
இடைச்சி மோர் கடையும் ஒலி எழுப்பி
ஒரு பீடி பிடித்திடுவோம் நாமிங்கு??

காவலர் காவலர் ஈங்கு உண்டு: அவர்
கைதியைக் கைதியை அடிப்பதுண்டு,
தமிழனோ தமிழனோ எனக் கேட்பதுண்டு
கேட்டுக் கேட்டுப் புடைப்பதுண்டு.



மண்டைகள் மண்டைகள் பிளப்பதுன்டு,
மாண்டவர் மீண்டிலார் துடிப்பதுண்டு,
கண்டவர் அழுத கதையுமுண்டு,
காணாது போனதில் உண்மையுண்டு

சப்பாத்துக் காலால் உதைப்பதுண்டு,
கண்ட காட்சிகள் பலதும் உண்டு,
ஒப்புதல் வாக்குகள் அளிப்பதுண்டு,
ஒன்றும் புரியாமல் முளிப்பதுண்டு

காலையாய்க் காலையாய் விடிவதுண்டு- அவை
பாலையாய்ப் பாலையாய் முடிவதுண்டு
வாந்திகள் பேதிகள் வருவதுண்டு - அட
பச்சோந்திகளா எனக் கேட்பதுண்டு,
பறைத்தமிழா பறைத்தமிழா என்றதுண்டு,
புலியா, புலியா எனப் புடைத்ததுண்டு.

வௌவால்! வௌவால் வருவதுண்டு
தலைகீழ் நிலையில் தொங்குவதுண்டு,
தமிழா, தமிழா இவ்விதியே,
உமக்கும் எனக்கும் தலைவிதியே,
என்று, என்று சொல்வதுண்டு.

காவலர், காவலர் வருவதுண்டு,
அவர் தலை கீழாகப் பிடிப்பதுண்டு!
துணையாய்த் துணையாய்ச் சிலருண்டு,
அவர் மூக்கிலே மிளகாய் பிடிப்பதுண்டு,
ஆணுடம்பதனைப் பிடிப்பதுண்டு,
உங்களுக்கு உங்களுக்கு..................

ஆண்மை உண்டோ எனக் கேட்பதுண்டு!
ஆண்மையில் குண்டுசி அறைவதுண்டு!!!
உண்ணாவிரதம் நடப்பதுண்டு,
இதைக் கேட்டு இவ்விடம் சில,பேர்
வருவதுண்டு........
இவர் உண்டு முடித்து வருவதுண்டு,
உண்ணாதார் முகம் கோண
இருந்ததுண்டு,மேலும்
ஈங்கு சில தமிழர் 'visit'
வருவதுண்டு!

இவர்களில் சிலர் முன்னாள்
உரிமைக் குரல் கொடுத்ததுண்டு,
இப்போது நீங்கள் உண்ணுவது
நல்லதெனச் சொன்னதுண்டு.!!


நாம் இவர்களைக் கண்டு நகைத்ததுண்டு,
உரிமை உரிமை எனச்சொன்னதுண்டு
சோறுண்பதே பேருண்மை என அவர்
சொல்லாமல் சொன்னதுண்டு.
நாம் அழுததுண்டு?
உபதேசி போன பின்னால் நாமங்கு
பொருமியதுண்டு

உபதேசம் செய்தவர் போனது கண்டு
காவலர் வந்ததுண்டு!!
எம்மிடம் அன்பாகப் பேசி அவர்
எம்மிடம் உள்ள தடி தண்டுகளை
எடுத்ததுண்டு...........
நாம் சில தடிகளை ஒளித்ததுண்டு

இவர்கள் தமிழரை அடிக்கலாம்
என அரசு சொன்னது கொண்டு
சீறி எழுந்தனர் சிங்களக் கைதிகள்
வெறி கொண்டு!

இவர்கள் அடித்ததனால்
மூவர் உயிர் இழந்தனர்
அந்த ஆண்டு 1998

அரச செலவில் அடித்தாச்சு,
கனத்தையில் எரித்தாச்சு,
முறைகேடு முடிந்தாச்சு,
விசாரணையும் முடிந்தாச்சு,
இனி இப்படி வராது எனச்
சொன்னாச்சு,
கவிதையும் முடிந்தாச்சு,
தமிழர் கதி என்னாச்சு?



# பிள்ளை அழுகுது நாட்டினிலே

தாயில்லாப் பிதாவில்லாப் பிள்ளை அழுகுது
நாட்டினிலே!
வாயில்லா வீணையிலே இசை எழுப்பி
மகிழ்கின்றீர்,
நாயில்லா வீடும் வீடோ என வளர்க்கின்றீர்
நன்றி மிகு நாய்களினை,
பேயில்லா நாடாக நாம் வாழப் பேதைகட்கு
பாயல்லோ போடோணும் புரிகிறதா
இப்போது!

ஒருவனுக்கு ஒருத்தியென்ற
தமிழ் சொன்ன தத்துவத்தை
ஒருவனாய்,இருவனாய்,முப்பத்து
மூன்றுபேர் கொன்றொழித்தார்
மாந்தையிலே!;சுந்தரத்தீர்.
தந்திரத்தில் தமிழ் உரிமை பறிப்பதற்கு
எந்திரத்தால் வழியில்லையோ
விளக்கு!

ஒரு பிள்ளை இரு தாய்மார்
வந்து போனார் அரசவைக்கு!
ஒரு தாய் போனாள்.பிள்ளையுடன்
வீட்டுக்கு!
மடுப்பதியில் ஒரு தாய் இழந்தாள்
நாலு பிள்ளை'ஷெல்'லுக்கு.
உம்மோடு கூடிக் கேட்கின்றேன்;
இது என்ன நாடா? காடா?
சொல் எனக்கு?

# போனேன்.....போனேன்

அகத்தியனைத் தேடிப்
பொதிய மலை போனேன்!-அவன்
அகால மரணம் அடைந்ததாக
ஆங்கொருவன் சொன்னான்!



அரிச்சந்திரனைத் தேடி
மாவிந்தம் போனேன்!-அவன்
வாய்மை எரிந்த நீறிங்கு
பணமாகக் கண்டேன்!

இராவணனைத் தேடிப்
ஈழ மலை எறினேன்!-ஆங்கு
அனுமான் குடியிருக்க
அழகாகக் கண்டேன்!

கம்பனைத் தேடிச்
சோழனூர் போனேன்!-அவன்
புத்தகத்தில் இருப்பதாக
புதியவன் சொன்னான்.

நாரதனைத் தேடி
இருப்பிடம் போனேன்-அவன்
மரிக்கவில்லை இன்னும் என
மமதையாகச் சொன்னான்!





# புது வருட சபதங்கள்

ஆனந்தம் என்று வாழ்வு
தன்னைத்தொடங்கிவிட்டால்
பேரானந்தம் என்றே அது
முடிய வேண்டும்.

கவலையீனம் என நீ
வாழ்ந்து வந்தால்
கவலைஈனம் நீ இதனை
உணர வேண்டும்.

கடலிலே வாழ்வதனைத்
தொடங்கினாலும் அது
சுடலையிலே முடியுமிது
உணர வேண்டும்.

பாலைவன வாழ்விலே
வாழ்ந்திட்டாலும்
பசுஞ்சோலை அங்கிருக்கும்
அறிய வேண்டும்.

அரிச்சந்திர,மகாராஜா
இறந்து விட்டான்!ஈங்கெவரும்
அரிச்சந்திரன் இல்லை:- இதை
உணர வேண்டும்.

மோசமான பொய்களையே
சொல்லுவோரை
மோசமான பொய்களினால்
விழுத்த வேண்டும்!

வாக்கினாலே அடிமை செய்து
வீழ்த்துவோரைச் சொல்
வாக்கினாலே தலையெடாது
சாய்க்க வேண்டும்.

✵

பாசம் என்ற கயிறெடுத்து
படுகுழியில் தள்ளுவோரை விசு-
வாசம் என்ற பிணைச்சலினால்
விலக்க வேண்டும்.

✵

ஊரெல்லாம் கோள்சொல்லி
வாழுவோரைப்
பாரெல்லாம் பரகசிக்கச்
செய்ய வேண்டும்.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵



# உனக்காக எழுதுகிறேன்

எல்லையில் துப்பாக்கி ஏந்தி
துயர் துடைக்கும் கவிஞினி தமிழினியே

கவிபாட நேரமில்லை
எனக்காகப் பாடு எனச்
சொன்ன வார்த்தையினைக்
களிப்பாக நான் எடுத்தேன்
கவலையினை விடு இனி.

களத்தினிலே நீ இருக்கக் கவிக்
குளத்தினிலே நானிருப்பேனினி
களத்தினிலே நடந்த கதை காதோரம்
சொல்லவினிக் கவிமரபு பாய்ந்து வரும்
வேங்கையினி.

பல்லை இளியான் தமிழனிவன்
பதவிக்கினி,பாங்குடனே
கடமை செய்வான் எனச்சொல்லிக்
கடமையினை உவ்விடத்தில்
செய்யுமினி!

நீண்ட நெடுங்காலம் போர் முனையில்
நின்றமையால் பேனா முனையதனில்
மை உறைந்து போயினவோ?
உங்களுக்காய்,எங்களுக்காய்
உண்மையென்ற மைதிறந்து,
துயில் துறந்து உன் பெயரால்
கவி உரைப்பேன் உண்மையினி.

இஞ்சாருங்கோ கவி சொல்லான்
இவன் இனி!
பஞ்சாப் பறக்கும் கவியினிலே
பொறியாய்ப் பறப்பேன்
நானினி!
உனக்காகப் பாடுவேன்
கவிதை இனி.

# ஒழித்தல்

பக்கத்து வீட்டில் பதுங்காமல்
சென்று
உங்கள் மண்வெட்டி இரவல் தா
என்று
கேட்டுநான் நின்றிருந்தேன்,
அன்று
வீட்டு உடமையாளன் மண்வெட்டி தேயுதே
என்று
ஒரு கேள்விகேட்டுத் தரா தொழிந்தான்!

பின்னொரு நாள் அயல் வீட்டில் கோடரி
ஒன்று
கேட்டு இரவலாகப் புன்னகைத்தேன்:அவன்
மென்னகைத்து
உங்கள் வீட்டுத் தேவைக்கு
என்னகத்தில்
கோடரியோ என்றிங்கு வாயசைத்தான்,

காதலித்தேன் ஒரு பெண்ணை
அவ்விடத்து
பேதலித்து,இரண்டு லட்சம் இனாமாகப்
பேச்செடுத்துத்
தருமாறு சொன்னேன், காதலி
வீட்டிடத்து,
உருமாறிக் காதலி தடுமாறி
உன்னிடத்துத்
தங்கையைக் கரை சேர்க்க
என்னிடத்துப்
பணமதனைச் செலவழிக்கலாமா
எனக் கேட்டுப்
பேதலித்தாள் பெருமை உற!

எவ்விடத்தும் இரவல் என
எப்பொருளும்
எவரிடத்தும் பெற்றிடாதீர்
அப்பொருள்
புறப்பொருள்: ∴ உம்மிடத்தில் உள்ளதுவே
கைப்பொருள்
பணி தீர்க்கும் அறிந்து கொள்,
அப்பொருள்.

# செய்யாதே...... செய்யாதே......

விட்டில் பூச்சிபோல்
நான் வாழின்
விளக்கொன்றைக்
கொழுத்திக்
காலடியில் வையாதே.

நீயும் நானும்
நண்பர்கள் தான்!
நடுவில் உள்ள
சுவரை இடியாதே.



கண்ணாடியில் தெரியும்
அழகுகளை ரசித்திடுக!
கையால் பிடிக்க
முயலாதே.....?


மரண பயத்தினால்
நீ மறைந்து வாழாதே
சுடலை வெளியினிலே
சுருண்டு படுக்காதே.

பெரியவனாய் நீ வாழ்வது
பெரிய வேலை செய்வதற்கு!
சிறியவர் கற்புகளைப்
பணம் கொடுத்து வாங்காதே.

குருடனாய் நான் வாழ
உள்ளமெல்லாம் சந்தோசம்-ஆனாலும்
என் வெள்ளைப் பிரம்புகளை
நீ ஒழித்து வையாதே!

நான் நானாக
வாழ விடு
நீ, நீயாக
வாழ்ந்து விடு
என்னை நீயாக
என்றும் நீ நினையாதே!


நான் போகும் பாதையில்
முள்ளை நீ வையாதே!
நீ போகும் பாதையில் நான்
புஸ்பம்,வைப்பேன் எனப்
புளுகாங்கிதம் அடையாதே!




# கண்டு பிடிப்பு

நாய் வந்தது;கண்டு பிடிக்கல்லே.....
நரி வந்தது;கண்டு பிடிக்கல்லே......
எனது வீட்டுச் செல்லப் பூனை
அதுவும் வந்தது;கண்டு பிடிக்கல்லே கண்டு....
எத்தனையோ நாளா என் வீட்டில் வாழுகின்ற
எருமை மாடும் வந்தது;கண்டு பிடிக்கல்லே
இந்த விசயத்தை......
எங்கிருந்தோ வந்த கட்டெறும்பு
கண்டு பிடிச்சது இந்த விசயத்தை....?

ஆமாமா......நான் போன பாதையிலே
நான் பெய்த சிறுநீரில்
சலரோகம் இருக்குதுண்ணு
கண்டுபிடிச்சிருக்கே......
நீடு வாழிய கட்டெறும்பே
நீ வாழ நின் குடி வாழ
என் வாழ்த்து.



# நீ நீ...



முற்றத்தில் விளையாடும்
முத்துமணிக் குழந்தாய்
விளையாடு விளையாடு
ஆணாக பிறந்ததனால்
சந்தோசம் இரட்டிப்பு!

'அம்மா' சொல்கையிலே
'அப்பா' சொல்கையிலே
அளவு கடந்தது
சந்தோசக் கடலே!

அப்பாவுக்கு யார் அடித்தாலும்
நொருக்கி போடுவேன்
நொருக்கி'என நீ சொன்னாய்
வார்த்தையொன்று : அவ்வயது
பத்தாக இருக்குமென
என் மனதில் ஞாபகமே!
நெஞ்சத்தில் விளக்கெரிய
வைத்த வீரமிகு வார்த்தைகளாம்!

நினைத்துப் பார்க்கிறேன்
அனைத்தும்,ஆனாலும்
நீ பிறந்தால் சுமையென
கருவழிக்க முயன்றும்:
முடியாமல் நீ பிறந்த
செய்தியது அம்மாவுக்கும்
அப்பாவுக்கும் மிடையினிலே
அலைமோதும் வார்த்தைகளாய்
இருந்ததை அறிவாயா நீ?

# ஆயுள் முடிகிறது

ஆயுள் முடிகிறது
ஆயுள் முடிகிறது
இப்போதான் வந்த
பாதை புரிகிறது

ஆயுளின் பாதி
பாயில் முடிகிறது இப்போது
பாதை புரிகிறது.

ஏங்கிய ஆசைகள்
நிராசையில் முடிகிறது, இப்பொது
பாதை தெரிகிறது!

பொய்யான வாக்குறுதி
தந்தவர்கள் குரல்கள்
காதொலியில் கேட்கிறது!
இப்போது பாதை
புரிகிறது?

கண் இரண்டும் சொருகிக்
கட்டிலிலே கிடைக்கையிலே
குத்து விளக்கெரியக்
கும்பிட்டுக் கடன்காரன்
வருவது,போவது,போட்டானே
எனப் புலம்புவது காதொலியின்
உள் ஒளியில் கனிவாகக்
கேட்கிறது.

சுகமாகப் போ என மண்கரைத்து,
பொன் கரைத்து,பெண் ஒருத்தி
வாயருகில் வைத்துக் குடிங்'கோ'
எனச்சொல்வதும் சோக்காக
என் செவிப்பறையில் சோ என்று
விழுகிறது.

சித்திரனும் புத்திரனும்
எருமையிலே
வந்திங்கு பாசமாம் கயிறெறியப்
பக்குவமாய் ஒளித்தின்று
சுருக்குக் கயிறொன்றை
மாட்டுவது
அற்புதமாய்,மங்கல் ஒளியினிலும்
மயிர் இழையில் தெரிகிறது!

பாலுக்குப் பாலகன்
வேண்டி அழுதிட
பக்குவமாய்ப் பால்முலை
தந்து நின்ற
பார்வதிப் பிள்ளையும்
என்னையும் என் உயிரையும்
கைவிட்டு விட்டது
நன்றாகத் தெரிகிறது!

இந்த நிலையிலும்
கள்ள உறுதிகள்
நான் எழுதிக் கடைசியிலே
அதை வித்து
நான்பெற்ற குமர்களுக்கு
சீதனமாய்க் கொடுத்ததுவும்
இனாமாக இறைத்ததுவும்
இங்கிதமாய் தெரிகிறது!

மூலைக்காணி இரண்டொன்றை
வித்துச் சா, செலவு
கல்வெட்டு, மரணச்சடங்குகளை
ஒழுங்காக நடத்து எனக்
கடைக்குட்டி சோமனுக்கு
எழுதியதும் கண்மூடும் நேரமதில்
சரியாகத் தெரிகிறது

ஆனாலும் எனக்கின்று
ஒன்றும் புரியவில்லை!
ஒளியாமல் சொல்லுகிறேன்
எதுக்குத்தான் இவ்விடத்தில்
இளைய தலைமுறை
உயிர் கொடுத்துப்
போராட்டம் இவ்விடத்தில்
செய்கிறது!
என்உயிர் பிரிகிறது.
மிகுதி நான் பிறப்பெடுத்து
உவ்விடத்து வந்த பின்னால்!
அந்நாள் வரும்வரைக்கும்
இனிய தமிழ் வணக்கம்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## பஞ்சுப்பூ

காதில் வடிந்தது சீழ்
ஆ அதில் வைத்தேன்
பஞ்சுப் பூ
வந்தது வந்தது
புரிந்துணர்வு?
வைக்கின்றார் துப்பாக்கி
வாயில் பஞ்சுப் பூ
விளங்கவில்லை இன்னும்!
துப்பாக்கிக்கு வந்ததோ
காதில் சீழ்?

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# வேண்டும் வேண்டும் பலபிறவி



கல்லாகி மனிதனாய்ப் பிறந்தேன் நேற்று
போயாய்க் கணமாய்ப் பிறப்பேன் நாளை
பொல்லாத இந்தப் பிறப்பொதுக்கி நானே
நினைக்கும் பிறப்பாய்ப் பிறக்க வரம் தா!

பிறவிகள்

பப்பா மரங்கள் பழுத்திருக்க பார்த்தவர் நாஊற
கொப்பில் இருந்து கூர் அலகால் கொத்திச் சுவைக்கக்
காகமாய் வேண்டும் ஈங்கொரு பிறப்பு.



சும்மா நிதம் சோறு தின்று
அம்மா என்று முட்டா வயிறு
தடவிப் பஞ்சு மெத்தை
தட்டிப் படுக்கும் வெட்டிப்
பயல் மீது விழுந்து கடிக்க
ஒரு கொடுக்கன் பிறவி.


காதலித்துத் தோல்வி
அடைந்த நேரமதில்
அவள் தலையில்
பூவாக ஆவது
போய்க் குந்தும்
றோசாப் பிறவி.



யானை விளாம்பழம்
தின்றது போல்
துப்பாக்கியால் 'பூ' பறிக்கும்
துட்டனின் கொட்டமடக்க
மானமிகு வீரனாய் ஒரு பிறவி.....

பசியால் வாடிக் குளிரால் நிறைந்து
போர்த்து நடுங்கும் மாரி வேளையில்
ஓட்டுக்குள் அடங்கி,இதுவே உலகென
மெய்யை மறந்து மணலில் கிடக்கும்
ஒரு நத்தைப் பிறவி.

வலைஞர் வந்து கடலில்
பிடித்தால்
கொலைஞர் என்று பட்டம்
வருமே
ஆயிரம் முட்டை மணலில்
இட்டுக்
கொக்கரிக்காமல் போ(கு)ம் ஓர்
ஆமைப் பிறவி.



முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்
வில்லங்கம் இனி எமக்கு வேண்டாம்!
காகக்கூட்டில் முட்டையிட்டு
கடமை இன்றிப் பறந்து செல்வேன்
கா.....கா....... எனக் காகம் கத்த
கூ.........கூ.........எனக் குஞ்சுகள் கூவும்..........
பொறுப்பில்லாது உலகம் சுற்றும்
குயில் போன்றொரு பிறவி.

வீட்டுக்குள் எசமான் தூங்க
வெளிவிறாந்தையில் நான் முடங்கித் தூங்க
வீட்டுக்குள் யாரும் வெளியார் வந்தால்
வாள்......வாள்........ எனக் குரைக்க வேண்டும்
வீரநாய் போன்றொரு பிறப்பு.



கோடரி போன்றொரு அரசு இருக்கக்
கைப்பிடி போன்றொரு மந்திரி வாழ
வீடெரி போன்றொரு இராணுவம் வந்திட
நிலையாது ஒரு சமாதானம் என்று
கூம்பிடும் கோழிபோல் மரத்தினில் இருக்க
வந்திடும் ஒரு மேதினச் செய்தி:-
வடக்கும்,கிழக்கும் இணைந்த செய்தியில்
கூவிடும் ஒரு சேவலாய்ப் பிறவி



# அன்னை பூபதிக்கு ஒரு கலைஞனின் நினைவாஞ்சலி



இளங்காலைப் பொழுதொன்றில்
உயிரிழந்தாள் இன்தமிழ்த்தாய்
களங்கண்ட காளைகள் நாம்
பாடுவோமே இவளுக்காய்!

ஆமெங்கள் பூபதித்தாய்
உயிரிழந்தாள் இன்தமிழ்த்தாய் !
தமிழுக்காய்,தமிழின உரிமைக்காய்
இனிய உயிர் ஈந்தாள்; தமிழ்
இனத்தாய்!

ஆடமாட்டோம், பாடமாட்டோம்
அவளுக்காய்,வார்த்தையின்றிக்
கண்ணிரில் அஞ்சலிப்போம்
அன்னைக்காய்!

அமைதிக்காய் வந்தாரே
வடக்காய்;அன்னையைப்
பூபதியை,அழித்தாரே
போருக்காய்!

அமைதிகாக்க வந்தவரால்
நாமழிந்தோம் மயானமாய்,
உயிர் இழந்தோம் ஒருகாலம்
சோகமாய்!

கண்ணகி மதுரைக்கு
வந்தது போல்
எண்ணித் துணிந்து
நின்றாளே அகிம்சைத்தாய்!

தமிழன்னை பூவிழந்தாய்
பொட்டிழந்தாய்,உரிமைகளும்
ஒவ்வொன்றாய் இழந்ததாக
உண்ணா நோன்பாக
வடக்கிருந்தாளே துன்பமாய்!

இவள் துன்பம் ஒருகாதால்
கேட்பாரே
ஒரு செவியால் கேட்டாரே
அதிகார தோரணையாய்!
ஒரு நாள் அன்னை இறந்தாளே
தமிழ் ஈழ மண்ணுக்காய்!

மறப்போமா இந்த மண்ணில்
உரிமைக்காய் வாழ்வோரே
மறக்க மாட்டோம்;மறக்க மாடடோம்
ஓமிவளாம் தியாகத்தாய்!

நினைவுத்தாய்
ஈழத்தின் முத்திரையில் இனிப்பதிப்போம்
முழுநிலவாய்;ஆடுவோமே
பாடுவோமே-ஆமினிமேல்
இவர் எங்கள் அன்புத்தாய்!

# சமாதானச் சித்திரையே....? வாழ்த்துரை கூறுவோம்!!!

மலராத காலையில்
இருளாத மாலையில்
கனாக்கண்டேன் தோழிநான்!
மலராத பூவினில்
வண்டொன்று வந்து
விரிகின்ற பூவுக்கு
வாழ்த்தொன்று கூறும்
விடிகாலைப் பொழுதுபோல்
கனாக்கண்டேன் தோழி நான்!

□□□

சித்திரை மலர்ந்து
சிந்தையில் சிரிக்க
நித்திரை பறக்க
நீள்நிலப் பரப்பில்
வெள்ளை வெள்ளையாய்ப்
புறாக்கள் பறக்க
அம்பு, வில் வைத்து
இலக்குப் பார்க்கும்
வேடுவர் மனங்களும்
சமாதானம் வாழ்கென
அம்பு,வில் எறிய
என் தன் கனாவில் வந்தது
தோழி!
சித்திரை மலரச்
சமாதானம் பூக்கென
செக்கச் செவேல்
வானப் பரப்பும்
வெள்ளை நிறமாய்



முகிலை விரிக்க
இலங்கைத் தீவில்
அமைதி மலர
ஆரம்பம் என்றே
கொள்ளடி தோழி!

□□□

மகரந்தப் மொட்டுகள்
பூக்களில் இன்றி
மன்மத வண்டுகள் மெட்டுகள்
போடுமோ?
உரிமை உள்ள யாப்புகள்
அமைத்து, உரிமைப் பூ
ஒன்றினை
உள்ளிடம் புகுத்தி அமைதிச்
சமாதானம்
அற்புதமாய் மலரட்டும்.

□□□

சித்திரையே சீராட்டு; ஈழ
நித்திலமே தாலாட்டு; அகதியாய்
இருப்போர் அடிமைகள் அல்ல
விடுதலை செய்யுங்கள் சித்திரை மலர.

□□□

சப்புமால் குமரையா சமாதானம் வேண்ட
புத்தபெருமான் புளகாங்கி அணிய
செப்புமோர் அமைதி விழாவில்
துட்டகாமினி வெள்ளைப்புறாவை பறக்க வைக்க
எல்லாளன் வந்து ''ஜெயவீவா'' சொல்ல
மலரட்டும் சித்திரை, புத்தாண்டு என்று.

**************

நன்றி வீரகேசரி 2000

# வந்து சேர்ந்ததே சித்திரைப் பொங்கல்

சிங்களர், தமிழர் பிரச்சினை ஒன்று
எங்கள் காலம் முடித்துக் கொண்டது.
கைமுனு சொல்ல, எல்லாளன் ஏற்க
எழுந்து வந்தது சித்திரைப் பொங்கல்.

''ஈரின வாழ்வில் புத்தாண்டு ஒன்றே
பேரின எண்ணம் இனியினி வேண்டாம்''
புத்தர் மொழியப் பிக்குகள் ஏற்க
வந்து சேர்ந்ததே சித்திரைப் பொங்கல்!

பாண்டிய நாட்டில் சிங்கள மன்னர்
பெண்கள் எடுத்துப் பெருமையாய் வாழ்ந்ததும்
கஜபாகு மன்னன் கண்ணகி விழாவில்
கலந்து கொண்டதும்; மறந்துவிடாதே
சித்திரைப் பொங்கல்!

எத்தனை சித்திரை நித்திரை பறந்தது!
எத்தனை குண்டுகள் லங்காவில் வெடித்தது.
அத்தனை உயிர்களும் இலங்கை உயிர்களே!
அத்தனை கொலைகளும் நிறுத்தெனச்சொல்லி
பொங்குவோம்; பொங்குவோம் - சித்திரைப் பொங்கல்.

இடம் துடிக்கவில்லை மானிட மங்கைக்கு
வலம் துடிக்கவில்லை; நீள்நிலமைந்தர்க்கு
உட்குறி காட்டினால், தீமையும் நன்மையும்
கலந்து வருமே காலக்குறியென
அடங்கி நடந்தது, சித்திரைப்பொங்கல்.

மஞ்சளாய் மின்னிய மின்னல்கள் எல்லாம்
வெள்ளையாய் மின்னுது சமாதானம் வருமென!
மஞ்சள், சிவப்பென மின்னிய கலர்கள்
வெள்ளையாய் வெளுத்ததே வேதனை வெளுத்தே;

சமாதானம் மலர்கெனக் கூற்றுவன் சொல்ல
சித்திர புத்திரன் சிரித்துச் செல்ல,
அந்தரம் தீர்ந்ததாய் அகிலமே வியக்க
சுந்தரமாய்ச் சுழன்றதே சித்திரைப் பொங்கல்



நேரமோ பத்தரை!,
மாதமோ சித்திரை!,
தம்பியோ நித்திரை!,
பேசுவதோ அண்ணாதுரை!
பழம் பெரும் வசனங்கள்
ஒலித்ததே சித்திரை!

சிங்கள மக்கள் தமிழர் உரிமையை
மங்களத் தட்டில் போட்டுத் தந்தனர்!
தன்னாட்சி ஏற்றுத் தங்கத் தகட்டில்
தந்துநிற்க,தகக் தக தக அதற்குத்
தகவென;ஒலித்ததே,ஒலித்ததே
சித்திரைப் பொங்கல்.

கற்க கசடற என்றதன் அர்த்தம்
வள்ளுவன் வந்து வார்த்தையில் பகன்றிட
தமிழன் தத்துவம் மகேசுரன் நவின்றிட
புத்தரின் அகிம்சையைப் புகலிடம் புகழ
ஆறுமுகம் வந்திங்கு அழகுடன் இயம்ப
உரிமை வந்தென உறுமிற்றே சித்திரை.

நன்றி தினக்குரல்
சித்திரை 14 2002

# இலக்கியச் சட்டம்

நானோ அரசன்;நானே கள்வன்
என்று சொன்னான் பாண்டிய
மன்னன்.
இதுபோல் சொன்னவர் உலகில்
உண்டோ?
அதுவே உலகின் உயர்ந்த சட்டம்

கடிது ஓச்சி மெல்ல எறி
வள்ளுவன் சொன்னதை
நெஞ்சில் பொறி;இதுவன்றோ
உயர்ந்த நீதி நெறி.

செல்லா இடத்துச் சினம் தீது
ஏழை அழுத கண்ணீர்
கூரியவாள் - இதுவன்றோ
ஆரம்ப நீதிமன்றம்

கண்ணுக்குக் கண்ணு
பல்லுக்குப் பல்லு
கமுறாபி மன்னனின்
பபிலோன் சட்டம்.

வேலியே பயிரை
மேய்ந்த சட்டம்
உகண்டா நாட்டில்
இடிஅமின் இஸ்டம்.

கொடுத்த காசுக்கு
மனிதச் சதைகள்
சைலொக் கதையில்
சேக்ஷ்பியர் சட்டம்.

எதிரியை வணங்கு
கைமுனு அரசன்
வகுத்த சட்டம்

எல்லாளன் சிலையை
வணங்கிய செய்தி
சிங்கள மக்களைப்
பாராட்டும் சட்டம்.

''இன்று போய்
நாளை வா'
கம்பன் சொன்ன
கவிதைச் சட்டம்.

புதியதோர் உலகம் செய்வோம்
பொய்த்த போரிடும் உலகை
வேரோடு சாய்ப்போம்
பாரதிதாசனின் பாமுறைச் சட்டம்.


கர்ப்பிணிப் பெண்ணைக்
கைது செய்யாதே!
இப்படி இருக்குது
இத்தாலி நாட்டில்
இனிய சட்டம்.

பசுவின் கன்றுக்காய்
மகனைக் கொன்ற
மனுவின் கதையே
மாபெரும் அறநெறி
அதுவன்றோ உலகில்
அகிம்சைச் சட்டம்.

நானே அரசன்
நானே அரசு
இப்படிச் சொன்னான்
பிரான்சிய லூயி.

இரண்டுக்கும் எத்தனை
வேறுபாடு.....
கண்டு தெளிந்தால்
காலம் சொல்லுமே
தமிழன் காத்த
கலங்கரைச் சட்டம்.

மன்னார் நீதிமன்றத்
திறப்புவிழாக் கவிதை 1997





# ஒரு கிழமை முந்தித்தான்

ஒரு கிழமை முந்தித்தான்
அந்த வீதியில் விழுந்தன
மண்ணிடை மைந்தர் உயிர்கள்!
ஒன்றல்ல இரண்டல்ல
ஒன்பது உயிர்கள்!

சில கடைகள் எரிந்து போயின!!
பல கடைகள் உடைந்து சிதறின
பஸ் ஓடவில்லை
மினி வான்கள் தலைகாட்டவே
இல்லை!
மீன்சந்தை கூடவில்லை
மரக்கறிச் சந்தையில்
மந்தைகள் கூட வரவில்லை
ஒரு கிழமை முந்தி!

இழந்த அடிப்படை உரிமைகள்
திரும்பி வரப் போவதில்லை!
இப்போது எல்லாம்
பஸ் ஓடுகிறது!
வங்கி கூடுகிறது !
சந்தையும் சரி
"இயல்பு நிலை வந்தது"

செய்தி அறிக்கை

ஐயகோ வாழ்கிறோம்
ஈழநாட்டில்!

# நில் என்ற சமாதானம்

காலுண்டா, கையுண்டா
எனப் பாரீர் இவ்வுலகில்! காலில்லைக்
கையில்லை
வாலில்லை; ஆனாலும்
எம் தலையில் ஏறி இருக்குதடா
பேன் இன்று!
ஏணி வைத்தா அது
எம் தலையில் ஏறியது?
எங்களைக் கேட்டா
சிவப்பு ரத்தம் குடிக்கிறது?
எங்களைக் கேட்டா
உயிர் விட்டுச் சாகிறது
நம் நகமடியில்?
நித்திரையில் வந்து
நுளம்பொன்று குத்துகையில்
குத்தியது நுளம்பென்று
விடிந்ததும் தான் தெரிகிறதா?

✵

''டெங்கென்ற'' காய்ச்சல்
இவ்விடத்தில் வந்துற்று
காய்ச்சல் என ஒன்று
கனதியாகக் காய்கையிலே
இரவில் கடித்ததுவு
நுளம்பென்று தெரிகிறது,
நல்லவேளை.

✵

பாம்பென்று வந்து படுக்கையிலே
கடித்திருந்தால், இந்த நேரம், நாங்கள்
இருப்போமா இல்லீரே?

✵

அவரவர்கள் தங்கள் தொழில்
கச்சிதமாய்ச் செய்கின்றார்.

ஒழித்தொழித்துச் செய்கின்றார்.
குட்டினால் சாகிறது; குனிந்தடித்து
அடித்துவிட்டால், காலடியில்
சாகிறது!
நாங்களும்தான் சோத்துக்காய்த்
தண்ணீர்க்காய் உயிர் விடுவோம்
என்றிராமல்
ஏட்டினிலே இடம் பிடிக்க
நாட்டினிலே எழுந்திடுவோம்; ஊர்
வீட்டான் பூட்டினிலே கை வையா
வாழ்வொன்று அமைத்திடுவோம்.
நல்ல கவி செய்திடுவோம்!
எம் மக்கள் நொந்தொருகால்
படுத்தாக்கா, எழுச்சி மிகு கவிதைகளைப்
படைக்கின்ற கவித்தொட்டில்
நாம் செய்வோம்!

வில்லுக்குச் சேவை செய்யும்
அம்புகளாய் நாம் வாழோம், இப்புவியில்
அம்பொன்றின் அறிவுரையை அணிந்துரையாய்
நாம் கேட்டு, வில்லொன்றை வளைத்திடுவோம்.
வீணாக வில் வளையோம்!

நாகாக்க என்ற வள்ளுவனின்
சொல் ஒன்றைச் சோக்காக
என்றுமே சோற்றுக்காய் எடுத்துரையோம்!
கல் ஒன்றைக் காட்டி மண்ணுக்கு மூத்தகுடி
சொல்லு விளையாட்டைக் காலடியில்
நாம் மிதிப்போம்.

பேரினத்தார் விளையாட்டு நாம் தவிர்ப்போம்
ஈரினத்தார், மூவினத்தார், ஓரினத்தார்
விளையாட்டு என்றுமே தவிர்த்திடுவோம்!

அவரவர்க்கு இருந்த இடம் அவரவர்க்கு
என்றுரைப்போம்!
எங்களை மிதிப்பவரை என்றுமே
நாம் மிதிப்போம்.
எங்களை அரவணைக்கும் நல்லவரை
நாம் முதலில் முத்திடுவோம்!
முல்லைக்கொடிக்கு நாம் மனம் உவந்து
தேர் கொடுக்கா விட்டாலும்
இலையொன்றே சுண்டி நாங்கள்
சட்டியிலே வறுத்தெடுப்போம்.
வேர், தண்டு எடுக்க மாட்டோம்
வெத்திலையை எடுப்பதுபோல்!
நாளைக்கும் பூ மலரும் என்றகுடி
நாமென்று,
தேர் கொடுக்கா விட்டாலும்
நாம் எடுக்கோம் வேர் இங்கு!

போர் ஒன்று மூண்டு
சமாதானம் வந்திட்டால்
சமாதானம்; சமாதானம்
ஆமாமாம்! உரிமையுடன்
சமாதானம்; உபவிதியாய்
நாம் அமைப்போம்!

காலுக்குள் மிதிவெடியைக்
கணக்காக ஏவி விட்டு
மேல் காற்றில் வந்து
'ஷெல்' ஒன்றை ஏவிவிடும்
கொல் என்ற குணங்களையே
அழிந்து போ என்கின்றோம்!
செல்லாத குடிகள் எனச் சீன
வெடி நீர் ஏவின்
நில்லாது போகும் 'நில்'
என்ற சமாதானம்.

# பொட்டிடுங்கள்!பொட்டிடுங்கள்!!



பொட்டிடுங்கள் பொட்டிடுங்கள்!
நாட்டிலும் நகரிலும்
நல்லதைச் செய்வோர்க்குப்
பொட்டிடுங்கள்! பொட்டிடுங்கள்!!



காட்டிக் கொடுத்துக்
கயவன் போல் சாப்பிட்டு
ஏட்டில் இடம் பிடிக்கும்
இந்த மனிதர்களை,
சுட்டிடுங்கள்! சுட்டிடுங்கள்!!
மனத்திரையால் சுட்டிடுங்கள்!!

கார்த்திகையில் பூப்பூத்து
மார்கழியில் மறைந்து விடும்
அப்பாவி மனிதர்களை
விட்டிடுங்கள்! விட்டிடுங்கள்!!

பிட்டிசன்கள் எழுதி நின்று
பாட்டிசன்கள் செய்து வரும்
எட்டிப் பூப்போன்ற இந்த மனிதர்களை
தூரவிலத்திடுங்கள்!தூரவிலத்திடுங்கள்!

நிலத்தில் பிணம் இருந்தால்
பலமான கழுகுக்கு
மூக்கின் மேல் வேர்த்துவரும்-தம்
பலத்தினிலே நிற்காது;அப்பாவி
மக்களையே அழகாகச் சுரண்டி வரும்
இந்த மனிதர்களை
ஏற்க மறுத்திடுங்கள்! ஏற்க மறுத்திடுங்கள்!

கால் மாக்சைக் குறிப்பிட்டுச்
சோசலிஷம் பேசிவிட்டு
கால் மாறிப் போகையிலே
மாக்சுக்குக் கொள்ளி வைக்கும்
அரிய பெரிய அறிஞர்களாம்
பொரிவாயின் பெட்டகத்தில்
அரிசி,காசு,செம்பு அளவான தண்ணிர்
அத்தனையும் வைத்துப்
பூட்டிடுங்கள்! பூட்டி.டுங்கள்!!

✻

சீமேந்துக் கலவையிலே
பிழையான கலவையிட்டு
ஊரி,உழுத்தமண்,செங்கட்டி
மொத்தமாக அள்ளிக் கொட்டி
ஓடு,பிசுங்கான் இவையாவும்
கீழ்ப்போட்டு,பார்த்திடுவாய் கட்டிடம்
என்றிங்கு சொல்வோர்க்கு
கொட்டிடுங்கள்! கொட்டிடுங்கள்
மண்ணை அள்ளிக
கொட்டிடுங்கள்!!

✻

முகம்மூடி, முகம் மலர்ந்து
முழுமதி போன்ற பெண்ணை
அகம்மலர,முகம் மலர
அழைத்து வரும் தோழியரை
சீதனம் கேட்டு சித்திரவதை
செய்யும் சிங்கார மாப்பிளையை
மணவறையை விட்டு
உடனடியாய்த் துரத்திடுங்கள்!

✻

தானியங்கள் தட்டுப்பாடு
மானியங்கள் எதுவுமில்லை,
தானியங்கித் துப்பாக்கி
இங்கிருக்குக் கடமை செய்ய!
இந்த நிலை இங்கிருக்க
இருதயத்தை அடகு வைத்து
கசிப்புக்குச் சீனி வித்த
கயவர்களின் கைகளையே
கட்டிடுங்கள்! கட்டிடுங்கள்!!

✻

இருதலைக் கொள்ளியாக
ஏங்காது என் கவிதை
பெருத்த முதலைக்குப்
பெரும் இடியாம் என் கவிதை!
அர்த்தமிகு என் கவிதை.
இப்போது முடிவடையும்
வழிவிடுங்கள! வழிவிடுங்கள!
போய் வருவேன்! வழிவிடுங்கள!!


✻

# ரயில் ஓடும் வேளையிலே மனம் ஓடும் கவிதை இது

அன்றோரு நாள்
மட்டுநகர் ரயிலேறிக்
கொழும்பு செல்லும் வேளையிலே
கொழுத்த ஒரு சிரிப்புக்கதை
வெடித்ததுவே அந்தக் கதை
இதுவேதான்.

ரயிலேறும் நேரமதில்
விசில் ஊத இராணுவத்தின்
சோதனையில் நேரம்போக
பெட்டியதை இழுத்துக் கொண்டு
ஓடி ஓடி ரயிலதனைப்
பிடித்துவிட்டேன் மாதோ...மாதோ...!

'சீற்' உண்டோ 'சீற்'உண்டோ எனப்
பெட்டிகள் ஒவ்வென்றாய்த் தேடித் தேடி
'கீற்'றான மூளையுடன் அலைந்து சென்றே
'கோணர்' ஒன்றில் 'சீற்'உள்ள அதிர்ஷ்டம்
கண்டேன்.



ஆங்கதனில் உட்கார்ந்து
அதிஷ்டம் பார்த்து
ஆண்டவனைப் பாராட்டிச்
சாய்ந்து கொண்டேன்....
பெட்டியினை மேலேற்றிப்
பெருமையாகக் கண்களினை
மூடிக் கொண்டு பொம்பிளைங்க
போல நானும் மூச்செறிந்தேன் !

பக்கமதில் சீற்றிருந்த இடைவெளியைக்
கழுகு ஒன்று கண்டுவிட்டுக் கண்ணடிக்க
தக்க ஒரு தலையாணிப் பயலும் என்தன்
அயல் உறவாய் உட்கார்ந்து சாயலுற்றான்

டட்டட்டட்டட் டட்டட்டட டட்டட்டட
என்ற குரல் ஊர் எழுப்பி அந்தப்
புகைவண்டிப் புறப்பட்டுப் போனதுவே!

ஏறாவூர்,வந்தாறுமூலை,கல்குடா,
புனாணை,வெலிக்கந்தை,பொலன்னறுவை
தாண்டிச் சென்ற புகைவண்டி
மீண்டும் ஒரு நிலையத்தில் நின்றதுவே..

நிறை இருட்டு, கரையோரம்
காடு உண்டு,
எந்த இடம் இந்த இடம் என்று தெரியாத
சனம் எல்லாம் ஏங்கி நின்று
குறட்டை ஒலி எழுப்பும் ஓசை
இலேசாக இப்போது கேட்டதுவே!

கண்ணயர்ந்த சிந்தனையில்
தலைகனக்க என்தலையும்
விண்ணுயர்ந்த தலையாளிப்
பயல் மீது இரண்டு தரம்
விழுந்தது என்று என்சிந்தைதான்
சொன்னதுவே....

மரியாதை தெரியாத பசங்கள்-நீரே
ரயில் ஏறி ஏன் வந்தாய் என்று சொல்லி
பூப்போன்ற தலையை
எடுத்தெறிந்து 'விசர்மனிதா'
எனச் சொல்லிக் கேலி செய்தான்.

சித்திரை மலந்தது.
நித்திரை பறந்தது.
''நீர் நேற்றுத் தியேட்டரில்
நின்றனையோ?
வீடியோவில் 2ND'ஷோ''
பார்த்ததுவோ என்றுரைத்த
அயல் சீற்றான் சிரித்து விட்டான்.

நான் இருந்த இடத்தினிலே
வேறொருத்தி இருந்தாளாயின்
இந்த நிலை எப்படியோ?
என்று நானும்
கற்பனையை ஓட்டி ஒரு
சிந்தனையைச் சிதற விட்டேன்....

பதினாறு வயதினிலே
பால் வெள்ளை முகம் ஒத்தாள்
கதிர் போன்ற முகத்தினிலே
வைரஒளி மூக்குத்தி
பட்டுப் போலக் கைவிரல்கள்
முத்துப்போல பல்வரிசை
முட்டிவிட்டால் அதிர்ச்சி பொங்கும்.

மூடிவிட்ட முந்தானை
மூச்செழும்பும் போதினிலே
பார்த்து விட்ட வாலிபர்கள்
மூச்சு விம்மும் பருவத்தாள்....

எழிலூட்டும் இரவினிலே
புகையிரதம் ஓடுகையில்
விழியிரண்டும் உள்சொருகி
கவிண்டு விழுகின்றாள்
வாலிபனின் தோள் அருகில்!
இப்போது அவள் தலையை
தட்டி விடுவானா இந்த
இளந்தாரி!
எப்போதும் என் அருகே
நீஇருந்து தோளில் விழு
அந்தச் சுகம்,இந்தச் சுகம்
எப்போதும் வராது என்று
சோக்காக இருக்குதென்று
கண்மூடி இருக்கானோ?

✵

இவ்வாறு நானும்
மனக்கவி பாடி இருக்கையிலே
டட்டட்டட்டட் டட்டட்டட டட்டட்டட
டட்டட்டட்டட் டட்டட்டட டட்டட்டட
என்று ஓலியெடுத்து மீண்டும்
ரயில் கொழும்போடும் வேளையிலே
சிரிப்பு மீண்டும் வந்ததுவே...

✵

அந்தச் சிரிப்பை அவன் பார்த்து
ஏற இறங்க என்னைப் பார்த்து
மீண்டும் சொன்னான்
விசர்மனிதன்......விசர்ச் சிரிப்பு........

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# இனி ஒரு விதி செய்வோம்

உலகமொழி அத்தனையும்
ஓரமதில் சேர்ப்போம் - இனி
உலகமொழி மௌனம் என
உலகினிலே சொல்வோம்.

உலக மதம் அத்தனையும்
வேலி மதில் சாய்ப்போம் - இனி
உலகமதில் மனிதம் என்ற
புதிய மதம் செய்வோம்.

தருமம் அதைச் சூது கவ்வும்
வாழ்வதனைக் கொல்வோம்
தருமமதைத் தருமம் கவ்வ
வேண்டுமெனச் சொல்வோம்!

உத்தியோக மொழியென்று
எதனையுமே சொல்லோம்.
சத்தியமாய் அன்பு மொழி
அகிலமதில் செய்வோம்.


வீதிகளில்,வீடுகளில்
விதிகளொன்று செய்வோம்.
சாதியில்லா நீதிகளில்
போதனைகள் செய்வோம்.

இலைமறை காய்கள் போல
இதனை இங்கு சொல்லோம்.
கலைகள் பல தேறி நின்று
பகிரங்கமாய்ச் சொல்வோம்

தொழிலாளர் சம்பளங்கள்
கூடவேண்டும் சொல்வோம்.
விழிபோன்ற தொழிலாளர்
வாழ வேண்டு மென்போம்.
சக்கி முக்கிக் கல்லெடுத்த
காலமது போச்சு; இனிச்
சிக்கி முக்கிக் கல்லேடுத்த;
காலமது ஆச்சு!!

பாலைவன வாழ்வுகளே
தலைவிதியாய் போச்சு இனிப்
பாழும் விதி நாட்டினிலே
'பாஸ்'என்பதே பேச்சு.

கவலை ஒன்றே வாழ்வதனில்
சகஜமாகப் போச்சு-இனிக்
கறுப்புச் சட்டை போட்டுவிட்டால்
அதுவும் இனிப் போச்சு .



# காதல்

காலை மலர்கையிலே பூவுக்கு
வண்டு சொன்னது காதல்
மாலை மலர்கையிலே மனித
இனத்துக்கு நிலவு சொன்னது காதல்.

காலை மலர்கையிலே கைக்குழந்தை
தாய்க்குச் சொன்னது மழலைக் காதல்
மாலை மலர்கையிலே காதலன்
சொன்னது மன்மதக்காதல்.

உலகக் காதலில் உயர்வான காதல்
அன்றில் அளித்த அன்றைய காதல்
'கையது பொத்தி மெய்யது விதிர்த்த'
கவிதை வரிகள் சங்கக் காதல்.

சோடி உதிரும் இரத்துக் காதல்
உலகம் கண்ட இழிவுக் காதல்!
சோடி பிரியாப் புறாக்கள் வாழ்வு
வாய்மை நிலைக்கு நிறைவான காதல்.


சிலம்பு கொண்ட கோவலன் வாழ்வில்
முந்தி நின்றது அவசரக் காதல்!
புலம்புகின்ற அமரா வாழ்வில்
அம்பிகாபதி, திரைமறைக் காதல்!!

சீதனம் வாங்கிச் சிரிக்கும் மடையன்
ஆதனம் போற்றும் அடிமைக் காதலன்!
இனாங்கள் வாங்கி முத்தம் கொடுத்தால்
இதுவன்றோ உலகில் இழிசனக்காதல்.

தாமரை முகத்தில் தவளை பாய்ந்தால்
தாமரை மலர்தான் கற்பினை இழக்குமோ?
சாமரை வீசும் மன்னவன் ஆணையில்
தாமரை மலர் போல் காதல் பூக்குமோ?

திறந்தமேனி கையிலே ஒரு பூ
ஓவியம் ஒன்று சிரிக்குது சிகிரியில்
அம்மணி மறைக்கும் அரை உரு மேனியில்
பிறக்குமே எனக்கொரு கலை உருக்காதல்.

றோமியோ யூலியட் மேல் நாட்டுக் காதல்
லைலா,மஜீனு இந்தியக் காதல்
சாஜகான்,மும்தாஜ் பளிங்குக் காதல்
படைப்போம் நாம் ஒரு சுதந்திரக் காதல்.



# கண்ணாடிக்கவிதை

பதினாறு வயது கொண்ட பருவப்பாவை அவள்
கண்ணாடி தனில் தன் எழில் முகம் பார்த்தாள்.
விதியென்று அழகுதனை எண்ணிப் பார்த்து
எழிலூறும் தனதழகைத் தான் ரசித்தாள்.

பதினாறு வயது மங்கை அவள்
பகல் இரவு கழிந்ததனால் கிழவி ஆனாள்.
பதித்திருந்த கண்ணாடி தேடிப் பார்த்து
அழிந்து போன தன் அழகைத் தான் இழித்தாள்.

மூச்சிழுத்து விழுகின்ற நெஞ்சு பார்த்தாள்.
நரைத்திருக்கும் மயிர் அதனைத் தொட்டுப்பார்த்து,
சீச்சீ...கண்ணாடி பிழையோ என
யோசித்து நொந்து கொண்டாள்.

அழகான அதரம் அதை நனைத்துப் பார்த்து
அந்த நாள் அழகுதனை மீட்டெடுப்பாள்.
அழகுமிகு அந்த நாள் மீண்டிடாதா
என்றெண்ணிக் கவலை கொள்வாள்.

பால்போன்ற சிரிப்போன்று
அழிந்து போய் விட்டதென்று
பாய் போடும் நேரமெல்லாம்
மனக்கதவால் அழுதிடுவாள்!
வேல் போன்ற கண்ணிரண்டு எங்கே என
கால் பார்த்து அழுகின்றாள்.
மங்கை இவள் இன்றொரு நாள்!

அன்றொரு நாள் புதுக்கண்ணாடி
புதுச்சீப்பில் புதுமணாளன்
அன்பெல்லாம் காட்டிற்று
அழகுமிகு கண்ணாடி, இன்றோ?

பூவிழந்து,பொட்டுலர்ந்து,புது மெருகு
இழந்த இந்த இளமை தனை
கூவி அழைக்காக் கண்ணாடி தனை
உடைத்தெடுத்து மதிலடியில் அவள் எறிந்தாள்.

செங்குத்தாய் விழுந்து
குறுக்கு வெட்டாய்
நின்ற தொரு கண்ணாடி.
எறிந்து விட்ட வேகமதில்
நிலைக்குத்தாய் நின்ற தொரு
முக்கோணக் கண்ணாடி.

துண்டு துண்டாய்
உடைந்திங்கு
பக்க வாட்டில் கிடந்ததொரு
சாய் வட்டக் கண்ணாடி.

இட்ட துண்டு நோக
எறிந்த துண்டு கொப்பளமாய்
எடுப்பார் கைப்பிள்ளை போல்
விழுந்து கிடந்தது ஓர்
சிறு துண்டுக் கண்ணாடி.

சீதனங்கள் இல்லாது
சீரழிந்து
ஆதனங்கள் இல்லாது
உன் கொப்பா அரற்றையிலே
என்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ
என்று நீயும் ஊர்சுற்றி
மாப்புள்ளை பிடித்த கதை
நானறிவேன்.நீயறியாய்!
பாலைப்பழம் பழுத்திருந்தது போல்
நிறம் மாறாக் கண்ணாடி உடைத்தெறிந்த
உதவாளே
போடி...போ..எனச் சொல்லி
அமைதி கொள்ளும்.


கண்ணாடி உடைத்தெறிந்த
கல்லாப் பெண்ணே
உண்ணாணை கேள் உந்தன்.
விண்ணாளம் என்று
முக்கோணக் கண்ணாடி
முகம் சுளித்து
சிக்காக்கிச் சில வார்த்தை
இங்கு சொல்லும்!!

கல்லூரிப் படிப்பினிலே
களம் அமைத்து
பல்லூரும் நீ சென்று
திரும்பும் போது
நல்லூரில் உன் வீட்டில்
என்னை வைத்து
கல்லூரி Lover அவர்
போகும் போது
கடைக்கண்ணால் பார்த்து

நீ சிரித்த செய்கை
இடைச்செருகல் என்று நீயும்
எண்ண வேண்டாம்!
உடைத்தெறிந்த கண்ணாடி
உடைந்தது போல்
உடைந்துபோம் உன் உள்ளம்
என்றுரைத்துக் கேலி செய்யும்.

குறுக்கு வெட்டாய்
விழுந்த ஒரு கண்ணாடி
விறுக்கெனவே எழுந்து நின்று
தலை சீவி
விம்மி எழும் வேதனையில்
விக்கி நின்று
எம்பி எம்பிக் குதித்து நின்று
வசைமொழிகள் பொழிந்து தள்ளும்.

கட்டிடங்கள் குலுங்கி இந்தக்
கதைகள் கேட்கும்.
வெற்றிடங்கள், வேலியோரம்
இதுவும் கேட்கும்.
குறுக்கு வெட்டுக் கண்ணாடி
குதூகலித்து
சுறுக்காக அம்மங்கை
கதையைச் சொல்லும்.



# வேண்டும் ஒரு மனைவி

ஊர்ப் புதினம் எல்லாம்
உள் வாங்கி ஊர்
உள்ளமதை வருத்தாத
உத்தமமான மனைவி
வேண்டும்!

✵

அடுத்த வீட்டில் பெண்களெல்லாம்
அடுத்தடுத்த அயல் நாட்டில்
இருந்து எல்லாம்
கணவன்மார் அனுப்புகிற
காசெல்லாம் எடுத்து வந்து
அழகழகாய்ப் பவுண் நகைகள்
வாங்கி வந்து
பகட்டில் நகை அணிந்து போகும் போது
உள் நாட்டில் இருக்கும்
என் உத்தமப் புருஷா.....
பாருங்கோ எனப்
பாவையர் பவுணைக்காட்டி
பகிடிவதை செய்யாத
பத்தினி என்தன்
மனைவியாக வேண்டும்!

✵

365 நாள் ஒரு வருசமாகும் !
வருடம் ஒன்றினிலே
முக்கால் மடங்கு பொழுதுகளை
மரக்கறியால் அவித்துவிட்டு
விரதம் எனச் சபதம் இட்டு
தன்னையும் வருத்தி
என்னையும் உருக்கி
மாமாங்கம், சந்நிதி,
கதிர்காமம்,சித்தாண்டி

ஓடிப் போகாத,சாட்சாத்
மிலிற்றறிப் பெண் ஒருத்தி
என் மனையாட்டி ஆக வேண்டும்.

எட்டுப் பெண் பிறக்க
எட்டாத வறுமையில்
மாமா வாட
மூத்த பொண்ணு பத்மினியாய்
மின்னி நிற்க
சீதனமில்லாது பெண் எடுத்து
அவளுக்காய் வாழ்ந்து
வையகத்தில் உருகுகையில்

கண் மூடி ஒருநாள் மாமனிறக்க
இளைய பெண் ஏழுக்கும்
ஏற்ற மணாளன் நான் பார்த்து
ஓடி உழைத்ததையும் சீதனமாய்
நான் கொடுத்து
"மூத்தத்தான் நல்லவரே" எனப்
பேரெடுக்க உழைப்பேனோ?
ஓ.....இறைவா ஏழு தம்பிமார்

வெளிநாட்டில் உழைத்திருக்க
ஏற்றபெண் ஒருத்தி ஓயிலாக வீட்டிருக்க
அந்தப் பெண் எவளோ
அப்பெண் ஒருத்தி
என் மனையாட்டி
ஆக வேணும்!

✵

அத்தானுக்கு நாம்
அள்ளித் தருவோம்
காசென்று,பிரான்சிருந்து
கடிதம் வர
வீட்டைப் பார்க்க
நீ வேணும் எனவிங்கு
அயலவர்கள் அன்புசொல
தேர்ந்தெடுத்த மூத்த மகள்
முத்தேயென ஏக மாமி
இடையிடையே சொல்லிக்காட்ட
சிமெந்து விலை அதிகம்
நில விலையோ குதிரை விலை
வீடு கட்டி முடிக்க
எத்தனை நாள் எடுக்கும்?
கட்டி முடிச்ச வீட்டில்
நீ இருக்க
சீர்வரிசை தருவதாகச்
சொல்லி மாமனார் தூதுவிடும்
மங்கையவள்
மனையாட்டி
ஆக வேண்டும்

✵

சேர்த்த சொத்தெல்லாம்
சேர்த்துக் கொடுக்க
அடுத்தடுத்து பெண்
பெறும் பெண்ணாகவா
நான் பெண் எடுப்பேன்?
வருசக் கொத்தியாய்
நீ பெறினும்
மூக்கு,முழி வைத்த
முழு நிலாப் பெடியளாக
ஆண்களையே கருத்தரிக்கும்
அழகான ஒரு அதிஷ்டசாலி
என் மனையாட்டி ஆக வேண்டும்!



# போதுமய்யா இக்கொடுமை

ஓரேயொரு முட்டை தான் இட்டு
ஓரெட்டாய்,மூவெட்டாய்க் குரல் எடுத்து
இரு செட்டை பல மொட்டாய்த் தான் தூக்கி
இட்டேன் ஒரு முட்டை என்றுரைக்க
இரு செட்டை வயிறடிக்கும்
எங்க வீட்டுப் பெட்டைக்கோழி.

கோழிகள் இடுமுட்டை ஒவ்வொன்றாய்ச் சேகரித்து
கூழிகளாய் இதை விற்றுப் பணமெடுத்து
ஊதுவதற்கு ஒன்றுமில்லா விடுகாலி
முட்டை விற்று ஊதுகிறான் சிகரெட்டு!
போதுமய்யா இக்கொடுமை நிறுத்திடுக!
- என்று குரலெடுத்துக் கூவுதடா,
கோழிக்குலம் குப்பை மேட்டில்!

கருவோடு,திருவோடு பிறந்தீர்கள் நன்று?
நல் உருவோடு உலகோடு ஒட்டிரோ இன்று?
ஊரோடு ஒத்தோடு என்றவ்வை சொன்னாளே அன்று

ஆனாலும் நீவிர் இன்று,ஊரானின்
வீட்டோட்டில் நடுஓடு கழற்றி நின்று
உள்ளே புகுவீரே! பூட்டோடு
உள்ளூரான் பொருளெல்லாம் அடிப்பீரே!
தோன்றில் புகழோடு தோன்றுதலாய்த்
தோன்றுவீரே தொன்று தொட்டு!

பொன்னோடு, புகழோடு நீர்தோன்ற
கூனன்,குருடன் செலவினத்தில்
ஆளில்லை,அவ்வீட்டில் என அறிந்தால்
கதவுகளைத் தள்ளிச் சிலாகைகளைக்
கழற்றுவீரே!
ஊர்வீட்டான் கதவுகளை உள்ளூரில்
‘பெயின்ற்’ அடித்து
உங்கவூட்டில் ஆட்டுவீரே
கலாசாரத் தொட்டில் என!!


ஆட்டிடுங்கள் ஆனமட்டும்!
ஆட்டத்தின் முடிவிலே
பேரினத்தார் இவ்வாட்டம்
முடித்திடுவார்
பெரும் இனத்தார் அவரென்று!

குவலயத்தில் மதிப்புள்ள
பெண்ணிடத்து
குதிக்காலின் கீழ் உள்ள
மண்எடுத்து அவள்
ஓரிடத்தில் இருக்கவிடாச்
செய்வினைகள்
ஊழ்வினைகள் செய்திடுவீர்
வாழுமட்டும்!
எங்குற்றீர்?
பேரினத்தார்,தமிழினத்தார்
தலைஎடுத்து வாழ்கின்றார் இந்த
நாட்டில்!
ஐயகோ,நீங்கள்,நாவல்மரத்து
மாமுனியை
அவள் அக்காள் மோகினியை
ஏவிவிட்டு

இவர் கொட்டம் அடக்கீரோ!
கூதீ,குதிர்வெயிறி கொம்மாட்டிப்
பேய் ஏவி
இவர் ஆட்டம் அடக்கீரோ!

ஆற்று மணல் எடுப்பதாக
அழகாகக் கறடி விட்டு
அழிந்த வீட்டில்,அடிவளவில்
மண்எடுத்து
மண்ணோ மண்என மட்டுநகர்
வீதிகளில்
விற்பீரே,நீங்ளெல்லாம்.

சத்தியமாய்
கேட்கிறேன்,உங்களினை!
நீங்கள் எல்லாம் கல்தோன்றி,
மண்
தோன்றாக் காலத்து மூத்த
குடியினரோ?



# எங்கள் எம்.பி க்குப் பகிரங்க கவிக்கடிதம்

அன்புள்ள அண்ணர் நீங்கள்
பா.உ.வாய்ச் சென்று பல நாட்கள்
என் வீட்டில் அயல்வீட்டில்
அடுத்தஊரில்
ஒட்டத்தந்த போஸ்டர் இன்னும்
கிழியவில்லை.

ஆனாலும் நீங்கள் வளர்த்து விட்ட
கொள்கையெல்லாம் கிழிஞ்சு
போச்சாம்!
ஊராக்கள் சொன்னாங்கள்; அவசர
காலச்
சட்டத்திற்கு நீங்களும் ஒத்தூதல்
தானாம்.

வீட்டு மதிலில் ஒட்ட என்று சொல்லி
கட்டுப் ‘போஸ்டர்’ தந்தீங்க தானே....
அதில் சிலதில் சாணி அடி;சிற்சிலதில்
ஆடு,மாடு இழுத்தெறிந்த விழுப்
புண்கள்.

இனி நீங்கள் இந்த ஊர்க்கு
தனியாக விடமாட்டீர் என்று
சொல்கிறார்கள்
கங்காணி வேலைதானும் தருவேன்
என்றீர்.
எங்கே தான் உமைத்தேடிக்
கொடுக்குக் கட்ட?

அதி உயர் பாதுகாப்பு வலையமதில்
அதி உத்தமர் கலையமதில்
கை வைத்து விரல்சூப்பும் பேறு
பெற்றீர்? பெருந்தகையீர் இனி எப்போ
இந்தப் பக்கம்?
❋❋❋❋❋❋❋❋

## தாஜ்மகாலின் எச்சரிக்கை



இவ்விடத்தில் வராதீர்!
இது ஒரு அன்பான எச்சரிக்கை!
விவாகரத்துச் செய்தவரே
இவ்விடம் வராதீர்!
காதலித்துக் கைவிட்டவரே
கரம் கூப்பிக் கேட்கிறேன்!
வேறிடம் பார்க்குக!
சீதன வெறியால்
பெண் வாழ்வைப்
பேதலிக்க வைத்தவர்களே
கை கூப்பிக் கேட்கிறோம்
அவளை அழைத்து
வாழ வைத்த பின்
இவ்விடம் வாருங்கள்
இங்கிதமாய்!
தாஜ்மகால் நானே
தனித்துவ வார்த்தை
அளவாகச் சொல்கிறேன்.
அன்புடன் வாழும்
உங்கள் மனைவி
அழகிய தாஜ்மகால்,
அவளுரு வீட்டிலிருக்க
வந்ததுதேனோ தாஜ்மகால்
பார்க்க!

நன்றி - தினக்குரல்

# சமாதானமானது !

உலகம் ஒளியானது; உலகம் இருளானது
இதில் எதுதான் சரியானது?
அலசில் பாதி உண்மையானது
மொத்தத்தில் இரண்டுமே சரியானது
வேற்றுமையில் ஒற்றுமை ஒன்றானது
அதுவே உலகில் நிலையானது
காலையும் மாலையும் வருவதானது
அலையும் கரையும் இருப்பதானது.

கண்ணில் கருமுழியும்,வெண்பரப்பும்
இருப்பதானது;
ஒற்றுமையில் இரு வேற்றுமை
நடப்பதானது;
கண்மணி ஒரு புறம்;வெண்மணி மறுபுறம்
சொல்வதாவது-
உலகம் என்பது பன்மையானது;நாமங்கே
இருப்பதானது;
ஒருமையானது; ஒருமைப்பாடானது.

கரும்பலகை கறுப்பானது;எழுதுகிற வெண்கட்டி
வெழுப்பானது!
காணுகிற எழுத்துக்களோ வெண்மையானது
கரும்பலகை மாத்திரமே கறுப்பானது
நாமிங்கே படிப்பதானது; கறுப்பினிலே
வருமொரு சமாதானம் எனவிங்கு
சொல்வதானது.

வானவில் வானவில் ஏழு நிறமானது
எந்த நிறம் அதிகம் பதிவானது?
வானமே சாட்சியாகக் கோடுகள்
சமானமானது; ஆகையால் ஒருவர்க்கு
ஒருவர் நாம் எமனாவது; என்றுமே
அழியவேண்டும்; உண்மையானது.

உலகிலே பல மதங்கள்-இவ்
வுலகிலே உள்ள சிறுமதங்கள்
ஒன்றையொன்று மோதி
அழியவில்லைப் பெரியோரே!
இந்து என்றும்; இஸ்லாமென்றும்
கிறிஸ்தவமாய் வாழ்கின்ற
யூறோப்பா மக்களுமே
மதங்களைப் பேணிப் படிக்கிறார்
மார்க்கமாம் நூல்களிலே
ஆனாலும் இவர்கட்கு ஒற்றுமையாய்
வாழ்வதற்குத் தெரியவில்லை
சத்தியமாய்!
குஜராத்தில், மொலுக்காசில்
அயர்லாந்தில் கொல்லுகிறார்
ஆளையாள்
இவர்களெல்லாம் ஏழையாள்!
இவர் விதிக்கு ஆண்டவனே
யார் பொறுப்பு?
முகம்மது நபியாகச் சிந்தித்து
இத்தினத்தில் இத்தீய விளைவுகளும்
தீர்க்கமாய் அறுந்து போக
இறைவனையே இறைஞ்சுகிறோம்.

# நானும் ஒரு கவிஞன்

தென்றலையே தூதுவிடும்
கவிஞர் பலர் உண்டு
நான் தென்றலுக்கும்
தூதுவிட்ட கவிஞன்
என்று சொல்லு

காதலுக்குத் தூதுவிட்ட
காவியங்கள் உண்டு-நான்
சாதலிலும் மானிடத்தைப்
பாடிடுவேன் சொல்லு

காதலுக்குத் தூதுவிட்ட
காவியங்கள் உண்டு - நான்
சாதலிலும் மானிடத்தைப்
பாடிடுவேன் சொல்லு

குறுக்கு,மறுக்குப்
பாதையிலே வாழ்ந்தவரைக
கண்டு
நான் கறுக்கு,நெறுக்குப்
பாடல்களைப் பாடியதுண்டு

நல்லதையே நல்லதையே
சிந்தியாத போது-ஏது
சொல்லி இறைவன் வைத்தான்
இவர்களுக்குக் காது?

கண்கள் இரண்டு காது இரண்டு
வைத்த அந்தப் போது
நாக்கு ஒன்று,மூக்கு ஒன்று
வைத்ததேனோ கேளு.

காது இரண்டு வைத்ததுவு
கடுக்கன் போடத் தானோ?
மூக்கு இங்கு வைத்ததுவு
மூக்குறிஞ்சத் தானோ?

# திறவுகோல்!

வடக்கிற்கும்,கிழக்குக்கும்
நானோர் திறவுகோல்
பேரினத் தரப்பார்க்கு நானொரு
வெட்டும் நாடாக் கோல்.
ஆனாலும் நானோர் கவிஞன்;
வையேன் என்றும் கன்னக்கோல்.

வானம் எழுதிய காதல் வரிகளில்
அச்சுக் குலைந்த திறவுகோல் நானே....
துயரப்பாடலின் முற்றுப்புள்ளி.
வடக்கும்,கிழக்கும் இணைந்த பாடலில்
ச,ரி,க,ம,ப,த,நி,ஸ சுரங்கள் நானே!
திறவு கோல் கொண்டு
திறப்பேன் கவிதை.

''முருகில் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் சொருகும் குழல்மடவீர்.
செம்பொற் கபாடம் திறமினோ''
கலிங்கப் பரணியில் கவிதைத் திறவு.

ஒரு பிள்ளை இரு
தாய்மார்கள்
யாரு குழந்தை? ஏங்கிய
காலை
பாதியாக வெட்டென மன்னன்
சொல்ல
மீதி முடிக்கு முன் அவளிடம்
கொடு என
அன்புத் தாயவள் எடுத்துச்
சொன்னாள்.
ஈங்கிவள் ஈதினைச் சொல்லும்
வேளையில்
நீதிக்கு வந்தது நெடிய
திறவுகோல்.

கொற்கைச் சிலம்பு கொணர்
எனச் சொன்னது
கொன்றச் சிலம்பு கொணர்
என விழுந்தது.
கோவலன் கொலையில் நீதி
மறைகையில்
பாண்டிய நாட்டில்
தொலைந்தது ஆங்கு;
நீதியைப் பற்றிய நெடிய
திறவு கோல்.

உடலால் அழியின்
உயிரால் அழிவர்
திருமூலர் சொன்னார்
திருமந்திரத் திறவுகோல்.

நானோ அரசன்;
நானே கள்வன்!
பாண்டிய மன்னன்
சொல்லிச் செத்தான்.
சிலம்பு சொன்ன
அரசியல் செய்தியில்
வெடித்துச் சிதறும்
நீதியின் திறவுகோல்.

பாலுக்குப் பாலகன்
வேண்டி அழுதிட
தேவி கொடுத்தது
பால்முலைத் திறவுகோல்!

விட்டில் பூச்சிபோல்
நான் வாழின்
விளக்கொன்றைக் கொளுத்திக்
காலடியில் வையாதே;
இதுவே எனது
கவிதைச் செய்தி
அதுவே என் கவிதையின்
இனிய திறவுகோல்.

**2000மாம் ஆண்டில்இந்துசமயத் கலாசாரத் திணைக்களம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடத்திய கவியரங்கில் இருந்து...**

# காலம் மாறலாம் ஆனால்.....

பாரெல்லாம் தேடிநாம்
நண்பர்களைப் பெற்றிடலாம்.....
பாலிய நட்பும் நான்
பழகிய பாதைகளும்
பசுமரத்தாணிகள்தான் !

வேற்று நாட்டில் கலந்து நான்
இனத்தை மாற்றிக்
குயிலாக மாறிக் குவலயத்தில்
கூவிடலாம்!
ஆனாலும் காகமாய் நான் இருந்து
எம் நாட்டுக் கானகத்தில்
கத்தியது - பொற்காலம் தான்!!

நாளைக்கே 'சுவீப்' விழுந்து
மாடமாளிகை,கூட கோபுரம்
கூவும் மயில்,குலவும் மயில்
என் கைவசமாகலாம்; ஆனாலும்
நான் பிறந்த பனைக்குடிலும்
அதில் ஒழுகிய ஒழுக்கும்
இதில் விழுந்த சூரியக்கதிர்
யாவும்.....எம்நாட்டுக் கலாச்சார
ஓடுகள்!

பழையன கழிதலும்
புதியன புகுதலும்
அழியாத நன்னூல்
சூத்திரம்தான்!
பழையன கழியாமை
புதியன புகாமை
இருந்தால் சுவைதான்
போங்கள்!

# இப்பவும் நான் மினிஸ்ரர்

சிஸ்ரர்!சிஸ்ரர்!,நான்
மினிஸ்ரர் இப்போது
ஆளும் வர்க்கத்தின்
அட்டகாச மினிஸ்ரர்!!
மிதிவெடியில் எங்கடை
சனங்களுக்குக் காலில்லை!
கையில்லை!
உட்கொள்ள எதுவுமில்லை!
ஆனாலும்'பிறதர்' நான்
மினிஸ்ரர் இப்போது!
வன்னி தாண்டிச் சில
லொறிகள் மாவோடு
வந்தது விடிய முன்பு!
அரை 'லோட்' சாமானோடு
வேறோரு லொறி போச்சு
முல்லைக்கு!
கால் வயிறும் காணாது
இவர்க்கிங்கு!
ஆனாலும் சிஸ்ரர்!
நான் மினிஸ்ரர்!

மருந்தில்லை,நாக்கு
வரண்டு குடிமக்கள்
பொருள் இழுந்து
உரிமையையும் அன்றன்று
இழந்திழந்து
வாடுகிறார் மடுப்பதியில்
ஆனாலும் ''பிறதர்'
நான் மினிஸ்ரர் இப்போது!

பாசுக்கு வழியில்லை
தெற்கு போக வழியில்லை
இலஞ்சத்தில்
பொருளனைத்தும்
இழந்து விட்டோம்!
போக வழியின்றிப்
படுத்திருக்கோம் மன்னாரில்!
ஆனாலும் சிஸ்ரர்
நான் மினிஸ்ரர்
இப்போது.

நன்றி இடி



✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

## *எடை*

பவுணை நிறுக்கின்ற
குண்டுமணி
பவுணையும் தன்னையும்
ஒரு தட்டில் வைத்துப்
போடவே கூடாது
எடை

# உறவுகள்

கடலால் பொருது கச்சேரி வந்தேன்.
எனக்கிங்கு இல்லை இரத்த உறவு.
காலத்தால் பிந்தி மன்னார் வந்தேன்.
ஆதலினால் இங்கில்லை எனக்கு முதல் உறவு.

கம்பன் வந்து பொன்னியைப் பார்த்தான்.
'இச்' என வந்தது கள்ள உறவு.
வம்பில்லா உள்ளத்தால் மன்னாரைப் பார்த்;தேன்
வந்ததே இங்கு சகோதர உறவு.

ஆனை இறவு மூடியதாலே
கொம்படியிலே பிறக்கும் புது உறவு.
பானையிலே சோறு இல்லையென்றால்
பூனை கூடச் சொல்லாது நல்லுறவு .

ஔவைக்கு அதிகமான் கலை நிலவு.
கம்பனுக்குச் சடையப்பன் தேன் நிலவு.
மார்க்சுக்கு ஏங்கல்ஸ் அயலுறுவு -நான்
தமிழாலே கவி சமைக்கும் புது உறவு.

கண்ணாலே கண்கள் பேசிய பின்பு
வாயாலே பேசவராது வம்புறவு.
உடலாலே உடல் பேசிய பின்பு
வந்திடுமே எமக்கொரு மழைலையுறவு.

இராமாயணம் தந்தான் கம்பவேந்தன்.
அரங்கத்தில் வைத்தான் சோழவேந்தன்
அம்பிகா-அமரா காதல் வேதம்
கதையெல்லாம் ஏற்கவில்லைச்
சோழ வேந்தன்.

அரசிக்கும் கவிஞனுக்கும்
காதலே இல்லை யென்று
சிரஞ்சீவி அனுப்பிய கதையினிலே
வெடித்துப் பிளக்கும் வர்க்கஉறவு

உனது பிள்ளையை ஒழுங்காய் வளர்த்தால்
ஒழுங்காய் ஒருவன் மாமா என்பான்.
ஒழுக்கம் இன்றி அவளை வளர்த்தால்
ஊரார் எல்லார்க்கும் மாமா உறவு .

மாதவியை எரியாத மனிதப் புன்னகை
கண்ணகி கதையில் புரிந்துணர்வு.
கொள்கை இல்லாத கோவலன் வாழ்வில்
கண்ணகி சொன்னது கற்புறவு.

முகலன் வீதியில் ரகுநாதன்
ஆற்று ஓடையில் தமிழ் நாதர்
போன இடத்தில் வல்லுறவு .
புரிந்தால் பூக்குமோ இனஉறவு.

பூக்கும் ஒரு புதுமனது!
நானும் உனக்கு நல்லுறவு!!
கவிதை முடிப்பேன் நல்வரவு
கைதட்டி முடியுங்கள்
பொன் மலைப் பொழுது.

மன்னார்க் கவியரங்கில் இருந்து
பிரசுர உதவி தினகரன் 96

# சவூதிக்கு ஒரு கடிதம்

சவூதிக்குப் போன
அன்பு மனைவி
பாக்கியத்துக்கு.....
நான் இவ்விடம் சுகம்தான்
உன்னிடை சுகம் எப்படி?
சவூதி போன நாட் தொடக்கம்
முற்றத்தில் காகங்கள் கத்துவதாலே
பாஸ்போட்டில் ஏதும்
பிழையுண்டோ,
உள்மனம்;
உன்மத்தமாகுது!

ஊரவன் பிள்ளையை
ஊட்டி வளர்க்க
உன்பிள்ளை
தானே வளருமாம் !
தளர்விலாத் தமிழிலே
பழமொழி சொல்லுது
அரபுத் தொட்டிலை
ஆட்டிடும் போது
ஏணையை,
எந்த மொழியில்
ஆட்டியாட்டி
மகிழ்வினைக் கொள்கிறாய்?
எங்கள் மகன் ஏகாம்பரமோ
அம்மாவாணை எங்கேயணை
விரல்களை
இவ்விடம் சூப்புகிறான்.
விரல்களைச் சூப்பும்
வில்லங்கப் பழக்கம்
வேண்டாம் என்பதால்

ஏணையை ஆட்டி
சூப்பியைக் கொடுத்து
சூப்பச் செய்கிறேன்!

நான் எழுதுவது கவிதையல்ல;
வாக்கியம்தான் என்றாலும்
பாக்கியம் இவ்விடம் எழுத்துப் பிழைகள்
இருந்தால்,கொண்டு கூட்டி
வாசித்துப் பார்க்கவும்.
நீ அட்வான்ஸ் லெவல்.
நானோ ஓ லெவல்.
குழந்தைக்கு நான் பொறுப்பு,
பெற்றதுவோ உன் பொறுப்பு;
அம்மி மிதித்தது உன் பொறுப்பு;
அருந்ததி காட்டியது யார் பொறுப்பு?
விரைவில் திரும்புக தாய்நாடு!
உன் பிரிவால் வாடும் கணவர்.

சுந்தரய்யா.



# அன்பு மனைவிக்கு ஒரு கடிதம்

நேற்று நான் சுகமாகக் கொழும்பு வந்தேன்.
'யோசு'பஸ்ஸில் சனக்கூட்டம் அதிகம் இல்லை.
கேற்றை உங்கு நீ பூட்டும் நேரமதில்
லொட்ஜ் கேற்று எனக்காகத் திறந்ததடி!


ஆழக்கிணறு கைவலிக்கும்!
நான் இல்லாமல் மெய் வலிக்கும்.
தண்ணிர் அள்ளும் நேரமதில்
என்னை நினைத்ததுவோ?
என் கண்கள் லேசாக வலித்ததிங்கு!

பல் ஒன்று வலித்துப்
பனடீன் போடையிலே
உனக்கு உங்கேதும்
உட்குறிகள் காட்டியதோ?
நித்திரையின்றிச் சரிந்து
படுக்கையிலே அச்சத்தம்
லேசாகத் தலையணையில்
விம்மியதோ?

ஏலாமல் போக நேற்று நான்
வெளிக்கிட்டு...
பல்லைப் புடுங்கையிலே
சீறிவந்த இரத்தமது
சிதலமாக வடிந்ததடி
இந்த நேரம் நீயிருந்தால்
நல்லெண்ணைய் வடித்தெடுத்து
துளசியிலைச் சாற்றினிலே
வாயினைத் துடைத்திடுவாய்
ஏன்ரை நிலையெல்லாம்
கனவினிலே வந்ததுவோ?

பல்லைக் கடித்தபடி
இரு..இரு..சிலநாட்கள்
நூறு சென்றி நான் கடந்து
அடையாள அட்டைகளை
ஆமிக்குக் காட்டிவிட்டு
காதல் என ஒன்று
களப்பில் இருக்குமட்டும்
நான் வருவேன்
உனைத்தேடி!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋



# இன்று மே தினம்

கட்டிலிலே இருந்து கொண்டால்
கால்களாடும்;எசமான்
வட்டிலிலே எழும்பிருந்தால்
நாய்களது வால்களாடும்.

தொழிலாளி கண்ணீரே
முதலாளி பன்னீராம்;
இனி இது செல்லாது
மே தினமே குரவையாடும்.

மானியங்கள் கிடைத்துவரும் எம்.பி.மார்கள்
தானியங்கள் அழகாகத் தின்று கொண்டு
காரியங்கள் பார்ப்பதாக லஞ்சம் கோரின்
வீரியங்கள் இல்லாது,அவன் கால்களாடும்.

கார்மேகம் கண்டு விட்டால்
மயில்களெல்லாம் நடனமாடும்.
போர்மேகம் வந்து விட்டால்
பொம்பருமே நடனமாடும்.
காளமேகம் இன்றிருந்தால்
கவிகளுமே நடனமாடும்.
ஈழமோகம் வேண்டுமென்று
இத்தினமும் நடனமாடும்.

கொழுந்து பறித்துக் கொலு இழந்து
மானிட இன்பம் தாம் மறந்து
விழுந்து எழுந்து மலையில் ஏறும்
மலையக மக்கள் வாழ்வு சிறக்க
மே தினமே இன்று நடனமாடும்.

காணாது போனோர் வரிசையிலே
இனிய மகனைப் பறிகொடுத்து
வீணான தமிழ்த்தாயின் கண்ணிரோடு
பேரினத்தின் அரசு இனி ஆடுமாடும்.

இரவின் மடியில் துயில்வோர் தமக்கு
இருளின் மடியில் அவலங்கள் புரியா?
இருளில் படிந்த இரத்த நிறத்தை
இருளும் இங்கு சாட்சியம் சொல்லா!
மே தினத்தோழா மே தின மீது
எங்கள் பெண்கள் அவலம் பாடு(ம்).

களுத்துறையில் மரணித்த தமிழனிவன்
கனத்தையிலே எரிகின்ற நிலைமை கண்டு
பழுத்த தமிழ்க் கிழவி அழுகின்றாள் நாதி இன்றி
அழும் கிழவி அழுகின்ற ஒலம் கண்டு
மே தினத்துப் புரட்சிகளே அழுது ஆடும்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் போட்ட
பாரதியின் மனமும் ஆடும்;இங்கு
செங்குருதி கொட்டுகிற தமிழனிவன் நிலை கண்டு
பாவாணர் பேனாவும் ஒடுங்கி ஆடும்

முறைப்படி வால் பிடித்தால்
பதவி சுகம் காலில் ஆடும்
கறைபடியாப் போராளி வெல்வான் என்று
களங்கமற்ற மே தினமே களிப்பிலாடும்.

மார்க்சீயம் பேசுகின்ற புத்திசீவி
பார்க்காமல் போகிறானே காரிலேறி
ஒரு ரூபாய் டிக்கட்டில் படங்கள் பார்த்து
ஒருக்களித்து வாழுகிறான் மே தினத்தில்
இவர்களுக்கா நான் உழைத்தேன் என்று கூறி
மார்க்சீயத் தத்துவமே விழுந்து ஆடும்

எட்டு மணி நேர வேலையாம்;
எட்டு மணி நேரம் நித்திரையாம்;
எட்டு மணி நேரம் ஓய்வெடுப்பாம்
எட்டப்பக் கும்பலே;இப்படியா
இங்கு நடக்குது வேலையென்று
கேளடா தோழா மே தினத்தில்.

உலகத் தொழிலாளி
ஒன்று படு!ஒன்று படு!
வேண்டும் தான்
வேண்டும் தான்
நன்றெனக் கூறிவிடு!
ஆனாலும் எங்களுக்கு
சுதந்திரமே சங்கநாதம்;
அதன் பின்பே சமதர்மம்
பாதையிலே உருளுகிற
பகலவற்கும்; பாடிடுவாய்
பாவினிலே ஈழநாதம்.

# பேனாவே



நஞ்சோடு விலை போகும்
தண்ணீர் போல
அஞ்சு,பத்து ரூபாய்க்கு
விலைபோகும் பேனாநீர்!
ஆனாலும் உங்களுக்கு
அபூர்வ சக்தி ஒன்றுண்டு
எந்த மொழிக்க;ாரன்
உன்னுடலைத் தூக்கிடினும்
அந்த இனக்காரனாக
நீ வருவாய் இனம் மாறி!

மொட்டைக் கடிதம் எழுதிடவே
உன்னுடலை எவர் தூக்கிப்
பிடித்தாலும்தூக்குவோர்க்குச் சோரமாகும்
துயர்நிலை உங்களுக்கு.
பொய்யாகக் கையெழுத்து
வைப்பிடுவோர் வந்தாலும்
உன்னைத்தூக்க இடம் கொடுப்பிர்!
மூடியைக் கழட்டினாலும்,மூட
மறந்தாலும் என் மை
பொய்மைக்கும் புரட்டுக்கும்
சோரம் போவதே எனச் சொல்லும்
பொல்லாத நிலை உங்களுக்கு!
ஒருவனின் பொக்கற்றில் நீரமாய்க்
.கறுப்பாய்,சிவப்பாய் பல நிறத்தில்
நீர் தூங்கும் நேரமதில்
கயவனுக்காய்,கைக்கூலிக்காய்
சோரம் போவதற்காய் பலர் எடுப்பர்
உன்னை இனி!

இத்தனையும் நீர் தெரிந்தும் வாய்
திறக்கீர் என்றறிந்து
மீண்டும் உன் உடல் மூடி
வைத்திடுவார் பொக்கற்றில்.

நன்றி நவமணி

# சந்தியில்

கால் மாக்ஸ் வந்தார்;குஜராத் நோக்கி!
எல்லோருக்கும் பொதுவில் எடுத்துரைத்தார்.

மதம் ஒரு அபின்; மறுதலித்தார்;மனம்பதைத்தார்
மறுகணம் திரண்டதே மே தினப் பேரணி!

############

உலகில் உள்ள இனங்கள் எல்லாம்
அலகாய்ப் பிரியின் ஆட்சேபம் இல்லை
கால்மாக்ஸ் சொல்ல;ஏங்கல்ஸ் ஏற்க
கால்கோளாய் திரண்டதே மே தினப் பேரணி

############

புரட்சியில் விளைந்த சோவியத் யாப்பில்
அரசுகள் விரும்பினால் பிரியலாம் என்பதை
பக்கம் விரித்து லெனின் வந்து காட்ட
கால்மாக்ஸ் ஏற்றார் மேதினப் பேரணி

########

''செக்கோ-ஸ்லாவக் இனங்கள் தனித்துவம்
இழக்கும்"
மாக்சு கூறிய அரசியல் சோதிடம் தோற்றது.
என்று ஏங்கல்ஸ் கூறிட ஏற்றது என்றதே மே
தினப் பேரணி

#######

இஸ்ரேல் சியோனிசம் அழிந்து போகவும்
பலஸ்தீன் சுதந்திரம் ஏற்கப்படவும்.
வழி மொழிகள் உயர்ந்து ஓலிக்கவும்
ஓமென்று உறுமிற்றே மே தினப் பேரணி
######

மதுரைத் தென்றல் கொழும்புக்கு வரவும்
கால்மாக்ஸ். கூடவே கொழும்புக்கு ஏகவும்
சமாதான வளைவுகள் சந்தியில் இருக்கவும்
வா எனத் திரண்டதே மே தினப் பேரணி
######

உலகத் தொழிலாளர் ஓன்றுபடவே
இலகு மொழிகள் கூறினேன் அன்று.
இலங்கையைப் பற்றி வேறெதுவும்
சொல்வில்லைக் குற்றமே;கூறினார் மாக்சு
######

மூவின மக்களே ஓன்றுசொல்வேன் நானின்று
பாவினால் சொல்கிறேன் பகுத்தறி வென்று
நாட்டிலே பிரிவினை வேண்டாமே என்றால்
யாப்பிலே நாட்டுங்கள் சுயாட்சி என்று
முழங்கி நின்றாரே பேரணி நின்று.
######

ஜெயவேவா கோசம் வெறி கொண்டு முழுங்க
வெற்றிக் கோசம் பின்னணி இசைக்க
வீதியெங்கும் வியர்வைகள் சிந்தவும்
நெறிகொண்டு நடந்ததே மே தினப் பேரணி.


※※※※※※※※※※※※※

நன்றி வீரகேசரி

கடந்த மே தினத்தில் வீரகேசரி வாயாடிப் பகுதியில் முத்திரைக் கவிதையாய் எடுத்தாளப்பட்ட கவிதை இது

# வண்டொன்று வந்தது !

வண்டொன்று வந்தது!
மலரொன்றில் நின்றது!!
நில் என்று சொன்னது
நிலையாமல் நின்றது
கல் ஒன்று காட்டுது
தமிழ்த் தொடர்பொன்று,நாட்டுது!
கொல் என்று எழுந்தது
கொல்லாதே என்றது.
'சில்'என்று பறந்தது
இவ்விடம் போனது.



வண்டொன்று வந்தது
மலரொன்றில் நின்றது.
பாணன் சூடான் பாடினி சூடாள்
ஆணா,பெண்ணா,பூவே நீ
மலர்ந்தது ஏன் என்று கேட்டது!
வண்டுக்காய் மலரவில்லை
பெண்ணுக்காய்,ஆணுக்காய்
மலரவில்லை,இன்று
சமாதானம் ஈங்கில்லை
என்றால் பூக்களும்
இனி மலரப்
பூமி இல்லை
புலர்காலம் மலர்ந்தோம்
பூ ஒன்று சொன்னது?

வண்டொன்று வந்தது!
மலரொன்றில் நின்றது!!
பூவே கேள் என்றது
பூ ஒன்று கேட்டது.

வண்டொன்று சொன்னது!
பூச்சூடும் பெண்களெல்லாம்
போர்க்களத்தில் என்றது.
விடுதலைப் பூ மலர்வதற்கு
நேரத்தைக் கேட்டது!
அன்றலர்ந்த தாமரை போல்
அரும் உயிரை ஈந்து நின்ற
போராளிப் பெண்களையே
கேட்டிடுவாய் என்றதுவே
பூ மலரா மொட்டொன்று!

**************

# சாத்தியப் படாது!

கழுத்தில் விழுந்த கவின்கலை மாலைகள்
குழுஉக்குறியாக உடனே கழற்றலாம்!
ஒரு காதால் கேட்டவை, மறுகாதால்;
மறுகாதால், மறுகா கழற்றலாம்
கண்ணால் பார்த்த அழகான காட்சிகள்
கடைக்கண்ணால், கடைக்கண்ணால்
கழற்றிப் பார்க்கலாம் !
கழற்றிய கழற்றிய கலனின் மூடிகள்
மீண்டும்,மீண்டும் மூடிப்பார்க்கலாம்.
மூக்கால் உறிஞ்சிய அசிங்க மணங்கள்
மூக்கை மூடியே வெளியே கழற்றலாம்!!
வாயில் போட்டதை,வாயில் போட்டதை
வயிற்றால் கழற்றலாம்!காலைக்
கழற்றலாம்;கையைக் கழற்றலாம்;
சலரோக வருத்தம் வந்த காலையும்
கழுத்தைக் கழற்றுதல்,சாத்தியப் படாது.
பாஞ்சாலி உடையினைக் கழற்றுதல்
கழற்றுதல்

இலக்கியம்,இலக்கியம் உள்ள வரைக்கும்
சாத்தியப்படாது!
நல்ல கவிஞனை நல்ல கவிகளை
இவ்விடம் இருந்து,அகற்றுதல் தூற்றுதல்
அடித்துவிரட்டுதல்,என்றுமே,என்றுமே
சாத்தியப்படாது! : **நன்றி தினக்குரல்**

# எப்பக்கம்?

சூதாடிச் சொத்திழப்போர் நளனின் பக்கம்
வாதாடி வெற்றி பெற்றார் ஊழின் பெருவலியாயுள
வள்ளுவனின் குறட்பக்கம்;மற்றோரால்
எள்ளப்படுவோர் எல்லாம் காலப்பக்கம்.

சின்ன வீடு கட்டுவோர் கம்பரின் கவிப்பக்கம்;
அன்னவரின் மகன் ஒருவன் சோழனின் மகள் பக்கம்;
கன்னை பிரிந்து கவித்துவம் சொல்வோர்கள்
ஔவையென்ற கிழவி பக்கம்!

சோழன் மகளைப் கவிஞனவன் கைப்படாமல்
ஆழமாகச் சோதித்தான் சோழவேந்தன்!
ஆங்கிவனின் சோதனையில் வெடித்துப் பறக்கும்
வர்க்கம் என்றொரு சாதிப் பக்கம்!

வாதாடி வெற்றி பெறாக் கோவலன் போல்
போதாத பாத்திரங்கள் படைப்போரெல்லாம்
இளங்கோ என்ற கவிஞன் பக்கம்
களங் காணா இலக்கியமோ குப்பைப் பக்கம

வாழ்வில்லா மானிடர்கள் அகதிப் பக்கம்
வாழ்வுள்ள மனிதர்களோ மனச்சாட்சி
இல்லாத மனதுப் பக்கம்; ஐயகோ
இல்லாத மனிதரெல்லாம் இரக்கும் பக்கம்.

இரண்டு பக்கம் உருளுகின்ற காசுகளோ
உருண்டு போய் நிக்குதய்யா ஆளும் பக்கம்!
வேளை வராதோ உருண்டோடிப் போகாதோ
ஏழை அழுத கண்ணீர்ப் பக்கம்?

கண்ணனின் காலடியில் கௌரவர்கள் கால்பக்கம்
பாண்டவரோ கண்ணனவன் தலைப்பக்கம்
வேளைக்கு வேளை மாறுதடா குணப்பக்கம்
குவலயமே தடுமாறு தடா; பணத்தின் பக்கம்.

அணுகுண்டை யார்போட்டான் அவனிப்பக்கம்?
அவர் கையில் ஆடுதடா உலகப் பக்கம்!
உலகப் பந்து சாயாதோ எங்கள் பக்கம்?
கலகம் இல்லாச் சமுதாயச் சட்டப் பக்கம்

வெற்றியை நேசிக்கும் மானிடர்கள்
வெற்றியென வெறி பிடிப்பர் இராமர் பக்கம்.
வெட்கமே இல்லையோ உங்களுக்குக்
கட்டாயம் சாயவேணடும் வாலி பக்கம!

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு தாமரைப் பூவே சாய்ந்தாடு
ஓய்ந்து போகுமோ தாலாட்டி வளர்த்த பக்கம்?
'மம்மி' 'டடி' எனத் தொடங்கி 'டடா' எனப்
பம்மாத்துக் காட்டுகிறார் தமிழின் பக்கம்

# வாங்கய்யா வாங்க(ா)

வாங்கய்யா வாங்க
வாங்கய்யா வாங்க
உங்களைப் போல்
ஒருவரையே உறுதியாகத்
தேடுகிறேன்!

✵

ஒரு கன்னத்தில் அடித்தால்
மறு கன்னத்தைக் காட்டும்
பணிவான மனிதனைத்
தேடுகிறேன் இவ்விடம்!

✵

இடுக்கண் வருங்கால் நகுகா
வள்ளுவர் சொன்னார் ஒரு கா
மறுகா..இவரைப் போல்
ஒரு உள்ளம் உள்ள நபரைத்
தேடுகிறேன் இவ்விடம்!
வாங்கய்யா வாங்கா...!!

✵


ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும்
வாடி இருக்கமாம் குளத்தண்டை
காத்திருக்கும் கொக்குப் போல்
பூத்திருக்கும் மனிதர்களை
அழைக்கின்றேன் இவ்விடத்தில்!
வாங்கய்யா வாங்க(ா)

✵

தமிழ்ச்சங்க விழா,கம்பன் விழா
ஊரெங்கும் நடக்கும் முத்தமிழ் விழா
இத்தனைக்கும் போகவரக் குந்தி
எழும்பும் இடங்களிலே மயில்

காசு கொடுப்பதற்கு நாலு
சல்லியில்லை என்தன் வங்கியிலே !
ஏற்றமிகு நல்லாளர் தமிழ்
வழங்கும் செவியாளர் யாவரையும்
கேட்கின்றேன்

'பணம் என்னடா பணம்!
குணம் தானடா நிரந்தரம்'
மேற்கோள் காட்டி நாலு 'சல்லி'
தந்திடவே.....
வாங்கய்யா வாங்க
வாங்கய்யா வாங்க
உங்களைப் போல் ஒருவரையே
உறுதியாகத் தேடுகிறேன்.



# இது என்ன உலகம்?

மயிர்நீர்ப்பின் உயிர்வாழாக் கவரி மா
எடுத்தாண்டார் வள்ளுவரே இயல்பாக!
கவரிக்கு என்னதான் இடைநடுவில்
நடந்ததுவோ?

ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்த
மா மடையர்கள் கவரி மா மயிரினையும்
பிடித்திழுத்துத் தற்கொலைக்கு
வழி வகைகள் காட்டினரோ?

இசைக்கு மயங்கும் அசுணப் பறவை
அகிலத்தில் இன்று வாழ்வது இல்லை!
இசைக்கு மயங்கும் அசுணக் குணத்தை
அசுரக் குணத்தார் சாதகம் செய்து
எலும்புடன் சதையும் ஏப்பம் தான்
இட்டாரோ?

பாலோடு நீர் கலந்த
பண்பற்ற வர்த்தகன்
அன்னம் இருந்தால் போச்சுதே
பிழைப்பென,
நீர் கலந்த பாலுடன்
விசமொன்று கலந்தாரோ?

மோப்பக் குழையுமாம் அனிச்சம்பூவு?
விலங்கைக் கொன்ற விசருகள் எல்லாம்
அனிச்சம் பூவையும் கொன்றனர்தாமோ?
வள்ளுவன் கண்ட அனிச்சம் பூவை
நாங்கள் காண மறைத்தனர் மாதோ?

திட்டியின் விடத்தினைக் கம்பர் அறிந்து
சீதையின் கற்பினைத் திட்டி என்கிறார்.
திட்டியின் வாழ்வையும் தீர்த்துக் கட்டி
இன்னும் தீர்க்க என்ன உள்ளது?


# வெற்றிக்கொடி

நான் வந்தேன்; நான் வந்தேன்
நீ வந்திருப்பாய் என்பதற்காக!
நான் போனேன்;நான் போனேன்
நீ வரவில்லை என்பதற்காக!
நீ வரவில்லை ;நீ வரவில்லை
நான் வரமாட்டேன் என்பதற்காக;
நீ போனாய்; நீ போனாய்
நான் வரவில்லை என்பதற்காக

நான் அழுதேன்; நான் அழுதேன்
உன் மீது படர்ந்திருந்த பசலைக்காக!
நீ அழுதாய்; நீ அழுதாய்
என் மீது பதிந்த அன்பதாக!
நாம் வாழ்வோம்; நாம் வாழ்வோம்
நாமிருவர் கொண்ட காதலுக்காக.

காசுக்காகப் பொருளுக்காக
அடிமையாக்கும் நோக்காக
நாம் வாழோம் சோக்காக
யாகவராயினும் நாகாக்க
சோகாப்பர் சொல்லிழுபட்டு
என்ற வள்ளுவர் சொல்லுக்காக!
சொன்னோம் ஒரு சொல்:-
அச்சொல்லைக் காப்பதற்காக
நாம் வாழ்வோம்;வருடக்கணக்காக?
இல்லாருக்குக் கொடுப்பதற்காக!
இல் காப்போம்; இல் காப்போம்
இன்பமதாக!

தியாகம் செய்த மானிடரை
நினைவு கூர நாமிருப்போம்
விழிப்பாக!
அந்த விழிப்பில் நாமிருப்போம்
களிப்பாக!
நாமிருப்பது நமது நாடு
எனும்படியாக!
சாய்வாக இருந்தபடி நோ
எடுக்க மாட்டோம்
துன்பமாக!
தமிழ் கொடி நாட்டிவைப்போம்
ஆரமாக!



# என்ன பொருத்தம்

துச்சாதனன்
புடவைக் கடையில்
விற்பனை பெண்ணாகப்
பாஞ்சாலி!

பாம்பின் வாயில் இருந்து
மீண்டான் வேடன்!
உயிர் தப்பிய தமயந்தி
கற்பினைக் கொடுக்கிறாள்
வேடனுக்கு!

இராவணனிடம் சீதை போனாள்
உடன்போக்கு!
இராமர் போனார் அயோத்திக்கு
தனிப்போக்கு.

இராவணனின்
புஸ்பக விமானம்
பறந்து போனது
இலங்கைத்தீவு.
சடாயு போனது
வழிகாட்டி.

நளன் இழந்தான்
சூதாடி நாடு,நகரம்
களத்தினில் ஆடியது
விளையாட்டு!

திருப்பித் தந்தேன்
நாடு நகர்- போயிடுக
மாவிந்தம்
சொல்லிப் போனான்
ஜெயித்தவன்.

மாதவி வீட்டிருந்து
கண்ணகி இல்லம்
மீண்டு வந்தான்
கோவலப் பெருந்தகை.
கண்ணகி கேட்டாள்
'மாதக் கணக்காக
மாதவி தேவையோ?
இரண்டொரு தினங்களில்
மீள்வது தானே
மனிசத் தன்மை!'

# வாழுகின்றோம்

இராமராகப் பிறந்திங்கு
இராவணனாய் வாழுகின்றோம்
பேயாகப் பிறப்பெடுத்துக்
கணங்களாய் அலைகிறோம்.

பரதனாகப் பிறந்திங்கு
செருப்பின்றி வாடுகிறோம்
சிங்கமாய்ப் பிறந்திங்கு
கொடுக்கனாய் கடிக்கின்றோம்.

சீதையாய்ப் பிறந்திங்கு
விவாகரத்து ஆகின்றோம்
கண்ணகியாய்ப் பிறப்புற்று
விதவைகளாய் ஆளுகிறோம்.

மாதவியாய்ப் பிறப்பெடுத்து
கோவலனைத் தேடுகிறோம்!
தமயந்தி வாழ்வெடுத்துக்
கற்பினையே தேடுகிறோம்!!

மனிதனாய்ப் பிறப்பெடுத்து
விலங்குகளாய் மாளுகின்றோம்
பனிப்புயலில் சிக்கி இங்கு
பகைப்புயலால் ஆடுகிறோம்!!

துச்சாதனன் பெயரெடுத்து
புடவையகம் நடத்துகிறோம்
பாஞ்சாலிப் பெண் ஒருத்தி(யை)
விற்பனைக்காய் வைத்திருக்கோம்.

சூர்ப்பனகை போல் பிறந்து
தாடகையாய் ஆடுகிறோம்!
மணிமேகலையாய் நாம் இருந்து
அமுதசுரபியினை நாமிழந்தோம்.

கால் இருந்து என்ன சுகம்
கால்கள் தடுமாறுகிறோம்!
கையிருந்து என்ன பயன்
கைகள் நிலை மாறுகிறோம்.

ஆத்திலே போட்டு விட்டுக்
குளத்தடியில் தேடுகிறோம்!
வினையை அறுத்துவிட்டு
விளை நிலத்தைத் தேடுகிறோம்

# இல்லை...இல்லையில்லை

பரதனாய்
வந்திங்கு
பாதரட்சை
கேட்கவில்லை.

இராமராக
வந்துற்று
வாலியைப்
பார்க்கவில்லை.

சீதையாய்
வாய்திறந்து
மாயமான்
கேட்கவில்லை.

அகத்தியனாய்
நடந்துவந்து
பொதிகமலை
தேடவில்லை.

அருந்ததியாய்
வந்திங்கு
அம்மியினை
மிதிக்கவில்லை.

அம்பிகாபதியாய்
வந்தொருகால்
சோழ அரசியினைச்
சோக்காகத் தேடவில்லை.

மேடைகளில்
வந்திங்கு
மாலைகளைத்
தேடவில்லை

அனுமானாய்
பறந்து வந்து
மூலிமலை
தேடவில்லை.

சடாயுவாய்ப்
பறந்திங்கு
இராவணனைச்
சாடவில்லை.

கோவலனாய்ப்
பிறப்பெடுத்து
மதுரைக்குப்
போகவில்லை.

நளனாக
அரசாண்டு
சூதாட்டம்
செய்யவில்லை.

தேடுகிறோம்
சமாதானம் ஒரு
நாடு என்ற
எல்லைக்குள்!
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்...
சரி வரவே இல்லை

# அச்சொட்டா !

பல்லோடு நடுவே
நாக்கிருந்தாலும்,
நாக்கோடு நம் பல்லு
ஒட்டா! ஒட்டா!!

உமிக்கு நடுவே
பதர் இருந்தாலும்
இரண்டும் ஒன்றாக
ஒட்டா! ஒட்டா!!

நாக்கு மூக்கினைத்
தொட முயன்றாலும்
நாக்கோடு மூக்கு
ஒட்டா! ஒட்டா!!

நகமும் சதையும்
அருகிருந்தாலும்
இரண்டுமே ஒன்றாக
ஒட்டா! ஒட்டா!!

பாலும் நீரும்
ஒன்றானாலும்
அன்னத்தின் வாயில்
அது ஒட்டா! ஒட்டா!!

ஒட்டார் பின் சென்றொருவன்
வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனச் சொன்னானே
வள்ளுவன்,அச்சொட்டா!!

நன்றி ஞானம்

# ஆடும் ...ஆடும்

கட்டிலிலே இருந்து கொண்டால்
கால்களாடும் - எசமான்
வட்டிலிலே எலும்பிருந்தால்
நாய்களது வால்களாடும்.

கட்டிலிலே பாரம் கூடின்
அதுவுமாடும் - ஆங்கிருவர்
முட்டலிலே கால்கள் நான்கு
சுவையாய் ஆடும்.

நாலடுக்கு மாளிகையில் இருந்து கொண்டு
சேரியிலே சிந்தனையைச் - செலுத்திவரின்
காலெடுக்கும் கனவானின் கால்களாடும்;அவன்
உறுதியில்லாப் போக்கினாலே உயிருமாடும்.

மானியங்கள் கிடைத்துவரும் எம்.பீ மார்கள்
தானியங்கள் அழகாகத் தின்று கொண்டு
காரியங்கள் பார்ப்பதாக லஞ்சம் கோரின்
வீரியங்களில்லாது அவன் கால்களாடும்.

கார்மேகம் கண்டு விட்டால் மயில்களுமே நடனமாடும்.
போர்மேகம் வந்ததென்றால் பொம்பருமே - நடனமாடும்.
காளமேகம் இன்றிருந்தால் கவிகளுமே நடனமாடும்.
ஈழமோகம் வேண்டுமென்று இத்தினத்தில் நடனமாடும்.

கொழுந்து பறித்துக் கொலு இழந்து
மானிட இன்பங்கள்- தாம் மறந்து
விழுந்து எழுந்து மலையில் ஏறும்
மலையகப் பெண்ணில் கண்ணீராடும்.

காணாது போனோர் வரிசையிலே
இனிய மகவைப் பறிகொடுத்து
வீணான தமிழ்த்தாயின் கண்களினால்
பேரினத்தின் அரசு இனி ஆடுமாடும்.

களுத்துறையில் மரணித்த தமிழனிவன்
கனத்தையிலே எரிகின்ற நிலைமை கண்டு
பழுத்த தமிழ்க்கிழவி அழுகிறாள் நாதியின்றி
யாழ் நங்கை அழுகின்ற ஓலம் கண்டு
ஈழ ஆட்சி வேர்கள் இனிப் பாறி ஆடும்.



குண்டானில் சோறிருந்தால்
பூனைகளின் வயிறு - ஆடும்
கண்டானில் காசிருந்தால் காசில்லாக்
கன்னியவள் மனங்களாடும்!

சிங்களத் தீவினுக்குப் பாலம்
அமைத்திட்ட பாரதியின் - மனமுமாடும்;
இங்கு செங்குருதி கொட்டுகின்ற
தமிழனவன் நிலைகண்டே தடுமாறியாடும்!

முறைப்படி வால் பிடித்தால்
பதவி சுகம் -காலிலாடும்
கறை படிந்த வரலாறு காற்றிலாடும்
கற்றவர்கள் முகமெல்லாம் ஈக்களாடும்.

வெள்ளையில் கறை படிந்தால்
இதில் காண்பவர் கவனமாடும்
கறுப்பிலே வெள்ளை பட்டால்
காண்பவர் மனமோ ஆடும்?

# இன்றைய முன்றில்



வீட்டில் வைத்தேன்; வீட்டில் வைத்தேன்
தென்னம்பிள்ளை
ஆட்டி விளையாடுதடா
அணில் பிள்ளை
∴ எமக்குப் பிறக்கவில்லை
ஓர் ஆண் பிள்ளை
ஒரு பெண் பிள்ளை
ஆண்பிள்ளை ஒரு சாணாய்
பெண்பிள்ளை ஒரு பூணாய்!

✵

வீட்டில் வைத்தேன்;நாட்டி வைத்தேன்;
வடலி பின்னை
வட்டில் விளையாடுதடா
கிளிப் பிள்ளை !
அணில் விளையாடியதடா
அன்றைய முன்றில் !
கிளி விளையாடுதடா
கிளையில்லா என் முன்றில்.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# வரவே இல்லை!

செத்துப் போக விருப்பமே
சாவு வரவில்லை
சொத்துச் சேர்க்க விருப்பமே.
சொத்தும் வரவில்லை .

✵

பதினாறு(ம்) பெற்றுச் பெருவாழ்வு
வாழத்தான் பெருவிருப்பமே
பதில் இல்லா மடல் போன்று
இதில் ஒன்றும் வரவில்லை!

நூறாண்டு வாழப் பெருவிருப்பம்
ஆறாண்டு குறைந்தாலும் பறவாயில்லை
ஆனாலும் வரவில்லை ஐம்பதாண்டு
ஏனிந்த வீணாசை;வரவில்லை!

காலாண்டு ஐரோப்பா!ஓராண்டு
ஈராண்டு அமேரிக்கா!அடுத்த
ஊர் சீனா வாழ ஆசையே; ஆனாலும்
ஓர் ஊருக்கும் விசா வரவே இல்லை.

ஐம்பெரும் காப்பியங்கள் படிக்க
எம்பெருமான் ஆணையாகப் பெருமாசை.
ஐயகோ... படிப்பென்ற நிலை எனக்கு
பையவா வரவே இல்லை!

ஆண் குழந்தை பல பெற்று
அரசனாக இருக்க நெடு ஆசை.
பெண் குழந்தை அன்றி
ஆண் குழந்தை பெறவே இல்லை!

அவன் போல இவன் போல
வாழவே எமக்குப் பெரும் ஆசை.
அவனிவன் வாழ்க்கை போல்
விதி எனக்கு வரவே இல்லை

முழம் ஏறச் சாண் சறுக்கும்
வாழ்வெனக்கு வாழவே ஆசை
சாண் ஏற முழம் சறுக்கும்
விதியன்றி வரவேயில்லை!

வரவின்றிச் செலவழிக்கும் சுகமே சுகம்
வரவேண்டும் நித்திலத்தில் என் ஆசை;ஆனாலும்
செலவின்றி வரவில்லை; சுகமில்லை
வரவெனக்கு வரவே இல்லை!


நோய் நொடி வந்து
போய் விட விருப்பமே
பாய் தலையணை 'ரெடியே'
நோய் தான் வரவே இல்லை

கைக்கும் வாய்க்கும்
கைக்கா உறவு எனக்கே;
ஆனாலும் இன்னும்
வாழ்க்கை வெறுக்கவே
இல்லை!

## என்ன குறை உங்களுக்கு?

என்னய்யா உங்களுக்கு?
ஏது குறை தங்களுக்கு?
பேச்சிருக்கு நல்ல மூச்சிருக்கு!
வெளி நாட்டுக் காசிருக்கு!
அக்காசில் சிரிப்பிருக்கு;வட்டியும்
அடிக்கடி இருக்குதிங்கு!
உள்வீட்டில் உப்பிட்ட கறிசோறு
ஒழுங்காகப் பூத்திருக்கு!
படுவான்கரை நெல்லெடுத்து
அதில் நல்ல சோறெடுத்து
அருந்துகையில்
நண்டு,சிறா,நற்பாரை,கலர்ப்பாரை
வேரில் பழுத்த பலா,கொழும்பான்
ஓய்யாரமாய் அங்கிருக்கு!
அடிமட்டக் கறிகளிலே
மேய்ந்திருக்கு உங்கள் கை!
மூக்குமுட்ட நீங்களிங்கு
சாப்பிட்டு,குறட்டை ஒலிச்
சத்தமொன்று சுகமாக எழும்புகையில்

புவி நடுக்கம் வந்தது போல்
புவியோடு நடுங்குதய்யோ?
பொய்யோ,புனைகவிணயோ
புனைகவியோ இது அன்று!
இன்றிங்கு பணக்காரர்
இப்படித்தான் பாரீரோ?
ஆரீரோ! ஆராரோ
ஆரிவரோ!!
✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲



# வானத்தீர் என்ன பொங்கள் அங்கு?

மண்புழு ஒன்று துடித்தது போல்
மின்னலொன்று மின்னுகுதே இங்கிதாய்?
இலங்கைத் திருநாட்டை
எட்ட வந்து காண்கிறிரோ?
என்ன புதுமை இது?
இலங்கை நாட்டில் பொங்கல் எனப்
'பக்ஸ்' ஒன்று வந்ததுவோ?
'பக்ஸ்' அடித்த செய்திகளில்
பழம் உறவு தும்மியதோ?
தும்மிய தும்மலாலே
வானத்தில் தும் துமிகள்
நிலமெங்கும் வீழ்ந்ததுவே!
தும்மென விழுந்த துமிகளுக்குள்
கம்மென நுழைந்து
கண்களினால் பார்க்கிறோம்?
எங்களை நினைத்து
நீங்கள் உங்கு பொங்குவது
இங்கிதமாய்த் தெரிகிறது



என்ன வெடிகள் அது
வானத்தில் வெடிக்கிறது?
சீனவெடி வெடிக்கிறீரோ
புதுப்பானை பொங்கியதால்?

நேற்றைய இரவுகளில்
வெள்ளிகள் மின்னியதே
இலங்கை நாட்டில் பொங்கலென
முத்துகளாய்ச் செய்திகளை
முழு உலகும் அனுப்புறீரோ?
முத்துநாடு பழம்பெயரை
முகவரியில் சேர்த்தீரோ?

வானத்தீர்! என்ன? உங்கு
பத்திப் பத்தி நூர்கிறது?
ஈழநாட்டின் மின்வெட்டு
உவ்விடத்தைச் சேர்ந்ததுவோ?
அல்ல...அல்ல.......
'சுட்ட பல்ப்பா' சுடாத 'பல்ப்பா'
கிட்ட நின்று 'ரெஸ்ற்' எடுத்து
பொங்கலுக்குப் பல்புகளை
விலை கூட்டி விற்கிறீரோ?

வானத்தில் வெள்ளி ஒன்று
பின் இரவில் மின்னுகுது!
ஏனடா உன் மனைக்கு
மூக்குத்தி போடவில்லை
பின் இரவில் கேட்கிறது
கேள்வி ஒன்று?

வானத்தீர் என்ன உங்கு
விட்டு விட்டு மின்னுகுது?
ஆனந்தன் கராச்சினிலே
'வெல்டிங்'கு செய்தது போல்!


ஆனந்தன் கராச்சினிலே
வீட்டுக்கேற் செய்தது போல்
வானத்தில் 'கேற்'போட
வெல்டிங்கு செய்யிறிரோ?

என்ன நிலவொளியில்
கறுப்பொன்று தெரிகிறது?
அதுங்கோ.....பொங்கலுக்கு
வளர்த்தவொரு கரும்புப்பயிர்
நிலவொளியை மறைத்ததென
அழகாகச் சொல்கிறிரோ?

அழகான பையொன்றில்
போட்டுவைத்த கிளி ஒன்று
கிழக்காகப் பறக்கவிட
மேற்காகப் பறந்ததடா
செவ்வான நேரமதில்
சிவந்த விழிப் பொதியொன்றில்
சோக்காக அவிட்டுவிட
ஆதவனாம் பெயரில் அது
அழகாகப் பறக்குதடா!
உள்வட்டம் வெளிவட்டம
களியாட்டம் ஆடிவிட்டு
மேற்குப் புறத்தினிலே
தாய் வீடு போனதடா!
இன்று போய் நாளை வா
தத்துவமாய் மறைந்ததடா!
கிழக்கினிலே மீண்டுதித்து

நாளை வரும் வேளையிலே
இன்று போல் நாளையுண்டு
தத்துவங்கள் பேசுதடா!
காலையுண்டு மாலையுண்டு
மண்ணுலகின் நீர் நிலையில்
பல மடங்கு நீரையுண்டு
ஒன்றும் செய்யவில்லை
என்றெமக்குச் சொல்லிவிட்டு
பொய்யாக மறைந்ததடா!
நாளை வருவேன் என்றெமக்கு
மர்மமாகச் சொல்லுதடா!
மன்மதனும் சுடமுடியா
நல்ல பொருள் நீ தாண்டா!

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற வானொலிப்பொங்கல் கவிதை அரங்கில் இருந்து.



# எழுதியவைகள்

சாதுவாய் நீ இருந்தாய்
முகத்தில் அது எழுதியது
சண்டியனாய் நீ இருந்தால்
சந்ததியில் எழுதியது.

தருமிக்குச் சில கவிகள்
சிவனாரே எழுதியது.
இருமி இருமி இக்கவிதை
நான்தான் எழுதியது.

புலவனாய் நீ இருந்தால்
புனை கவியில் எழுதியது.
நல்லவனாய் நீ இருந்தால்
நானிலத்தில் எழுதியது.

பாவாணர் மரபெல்லாம்
பரந்தாமன் எழுதியது.
நாவாரப் பொய்யுரைத்தால்
சாத்தானே எழுதியது.

கவிஞனாக நீ இருந்தால்
கலைவாணி எழுதியது.
காதலிலே நீ போனால்
மன்மதனே எழுதியது.

புழுதியிலே நீ வாழ்ந்தால்
பரமனது எழுதியது.
கழுமரத்தில் நீ ஏறில்
இயமனது எழுதியது.

இளமையிலே நீ போனால்
இறைவனே எழுதியது.
கல்லாமல் நீ போனால்
தந்தையவன் எழுதியது.

காளிதாசன் நாக்கினிலே
காளியது எழுதியது.
மொழியளக்கும் கவிதை இது
நானேதான் எழுதியது.

இன்று போய் நாளை வா
கம்பரது எழுதியது!
இன்று ரொக்கம் நாளை கடன்
கடைகாரன் எழுதியது.

பொரிய புராண அடிகள் இவை
எம் பெருமான் எழுதியது.
செகத்தினிலே எழுதியது- அது
சேக்கிழாரே எழுதியது.

பரதனுக்கு அரசாட்சி
செருப்பினிலே எழுதியது.
இராமருக்கு காட்டாட்சி
கூனியவள் எழுதியது.

குடையினிலே எழுதியது.
தொப்பியிலே எழுதியது.
செருப்பினிலே எழுதியது.
சப்பாத்தில் எழுதியது.

காதலர் கடிதங்கள் சில
கண் விழியால் எழுதியது.
தேவர்கள் கடைந்தமுதம்
பாற்கடலில் எழுதியது.

பகல் இரவு வாழ்க்கையெலாம்
பகவானே எழுதியது.
இரவினிலே பகல் இங்கு
முழுமதியே எழுதியது.

ராஜயோகம் நீங்கி ஒரு
சாதுகோலம் கொண்டால் நீ
கீதையிலே எழுதியது- அது
பரந்தாமன் எழுதியது.

உறியினிலே ஒரு பானை
நிலத்தினிலே விழுந்திருந்தால்
அது பூனைகளே எழுதியது- அது
கால் விரலால் எழுதியது.

வாயிலே பொய்யிருந்தால்
பையிலே காசிருக்குதம்- இந்தவரிகள்
சிரித்திரன் ஏட்டினிலே
சிவா அண்ணர் எழுதியது.

அருங்குணத்துப் பெண் ஒருத்தி
வகிடு ஒன்று இட்டது- அது
கொள்கையுள்ள கணவனுக்கு
நேர்மையாக எழுதியது.

காலையிலே எழுதியதை
மாலையிலே எழுதவில்லை- மதிமுகத்ததுப்
பெண்களிலே எழுதியதை
ஆண்களிலே எழுதவில்லை.

ஆளம்பு சேனையுடன்
அழகான வாழ்க்கை வரும்
நாள் வந்து சேர்ந்துவிட்டால்
நாலும் மறைந்து விடும்.

சந்திக்கும் விழிகள் எல்லாம்
சந்தோச விழிகள் என்றால்
சிந்திக்கத் தேவை இல்லை
தினமும் திருநாள் தான்!

காலடியை வைக்கையிலே
கணக்கறிந்து வைக்காமல்
காலடிக்கு ஒரு முறை நீ
கலங்குவதில் என்ன சுகம்?

இந்த வரிகள் நானே
எழுதவில்லை; கவியரசு
கண்ணதாசன் அந்தநாள்
எழுதியது.

பகைவனுக்கு அருள்வாய் எனப்
பாரதியார் எழுதியது
பண்பட்ட இந்துமதம்
என்றோ எழுதியது!!

அம்மை அப்பன் உலகம் எனப்
பிள்ளையார் எழுதியது
தரணி எங்கும் இத்தத்துவர்கள்
இந்துமதம் எழுதியது.

உன்னைப் போல் அயலை நேசி
இயேசு பிரான் எழுதியது.
உன்னை உணர்ந்தால்
உலகத்தில் போராடலாம்
இந்து மதம் எழுதியது.

தென்னாட்டிலே சிவ வணக்கம்
இந்துக்கள் எழுதியது.
எந்நாட்டவர்க்கும் இறைவன் என
ஒருமைப்பாட்டை எழுதியது.

# ஆண்டவன் வேண்டாம்



தெய்வம் உண்டென நம்பும்
தேனிள வாலிபன் நான்.
அய்யோ வேண்டாம் தெய்வமென
வெய்யோனை வேண்டும் உள்ளமும்
நான்!

தன் வீட்டுக்குப்பைகளை
பின்வீட்டில் கொட்டுகிற
பித்தருக்கு பின்கதவால் உத்தியோகம்
முத்தாகக் காட்டுகிற முருகப்பெருமானே;
அப்பா சிவனாரே,ஐயா உங்கள் பிரசன்னம்
இவ்விடத்தில் இனி வேண்டாம்!

தன்வீட்டு குமருகளை ஒழுங்காக வாழவைத்து
தன்பிள்ளை வயதொத்த ஏழைக் குமரியினை
வைப்பாட்டி நிலை ஒன்றில் சிற்றின்பம் அனுபவிக்கும்
அப்பாமார் சில பேரை,அவனியிலே வாழவைக்கும்
ஆண்டவனே,அண்ணார்க்கு அடுக்குமாடி
வாழ்க்கையினை அசலாகத்தந்தவனே
இந்த நிலை தொடருமென்றால் ஆண்டவனே
இனி எமக்கு நீர் வேண்டாம்!

எத்தனையோ திறமையுள்ள வறுமைமிகு
வாலிபர்கள்,வையகத்தில் பலர் இருக்க
எத்துணையும் திறமையில்லா செல்வர்வீட்டுப்
புத்திரரை வங்கியிலே உத்தியோகம்
வழங்கி இங்கு கௌரவிக்கும் வைரமில்லா
கோணங்கி எம்.பிகளை,லஞ்சமதின்
புதல்வர்களை வையகத்தில் தெரிவு செய்த
வளமான ஆண்டவனே இப்படித்தான்

வருங்காலம் என எண்ணின் இனி நீங்கள்
பூசைக்காய் கதவுகளைத் திறப்பான் இவனென்று
இனியெண்ணி இவ்விடத்தில் இனிமேலும்
வரவேண்டாம்!

காலோடு கையோடு படைத்தெம்மைப்
பாலோடு,பழத்தோடு,வளத்தோடு
வாழ விடுவீர்கள் என எண்ணி
வாழ்ந்து வருகையிலே காலடியில்
மிதிவெடிகள் இருப்பதனைக் கணக்கோடு
காட்டாது,காலடியில் மிதிவெடியை
வெட்டோடு துண்டு இரண்டாய்
வெடிக்க வைத்த கடவுளாரே
கைகூப்பிக் கேட்கின்றேன்,ஐயர்
வடிவிலேனும் இனி இங்கு
வரவேண்டாம்!

சொந்த வீடு நாம் அமைத்து
இந்த வீட்டில் உமக்கென்று
இடம் எடுத்து வள்ளியும்,தெய்வானையும்
அருகருகே இருப்பதற்கு இடம் கொடுத்து
கல்வி,கலாசாரம்,பண்பாடு நாம் எடுத்து
பல்லாண்டு வாழ நாம் நினைக்கையிலே
அரைநொடியில் எமையெல்லாம் அவ்விடத்தில்
இரைதேடா நிலை ஒன்றை நீர் வைத்து
அகதிமுகாம் கலைத்த பேரினத்தார் துப்பாக்கி
கடுகதியில் நீர் பிடித்து,அவ்விடத்தில்
கலைத்து விடச் சக்தியில்லாச் சக்தியாக
நீர் இருந்தீர்!இந்த நிலை தொடருமெனில்
அன்புள்ள ஆண்டவனே இனிமேலும்
நீர் இங்கு வரவேண்டாம்

# தூரியர்க்கு அனுப்பிடுங்கோ!

வண்டொன்று விழுந்து கண்ணொன்று பார்வைபட்டது;பகல்
இரவு
தெரியாது கண்ணொன்று பட்டது வண்டுக்குத் தெரியுமோ
வையகமே?

பகலில் திரிந்த விசர்நாய் காலொன்றில் கடித்துக் கடுகதியாய் சாகக்கிடக்கிறேன்; நாய்போல் குரைக்கிறேன்.......ஓ......ஓ தெரியுமோ விசர்நாய்க்கு நானிங்கு குரைப்பதனை?

பகலில் திரிந்த படுபாவி நுளம்பொன்று காலில் கடித்தது கச்சிதமாய்; யானை போல் கால்பெருத்துப் பானைபோல் வயிறெடுத்து அலைகிறேன்; ஏனென்று தெரியுமோ அந்த நுளம்புக்கு?

மாதம் ஒரு முறை வருகின்ற பௌர்ணமியில் பாதம் பதிக்கவாவது அவள் வருவாள் எனப் பார்த்து நீள்நிலப் பரப்பதனில் நான் அலைவது தெரியுமோ? அந்த பௌர்ணமிக்கு?

கீச்சுக் கீச்சு என்று கதைக்கின்ற என் மனைவி சமைக்கின்ற சாப்பாடு சரியில்லை எனவேங்கி சிற்சில நேரமதில் ஹோட்டலில் நான் விழுங்கும் கொடுமைமிகு காட்சிகளை அறிவாளோ என் மனைவி அறிவான பேச்செடுத்து?

கட்டிலின் மேலிருந்து, பட்டுமெத்தை நான் ஏறி
கட்டிலில் துயிலுமென் மெய் உடம்பில்
வெண்அணுக்கள்,சிவப்பணுக்கள் பேதமின்றி
புண்படுத்திக் குடிக்கிறது மூட்டைகளே!
அறிவீரோ...உங்களாலே நான் ஒவ்வொரு
நாளும் அணுவணுவாய் இறப்பதனை?

நான் பலமாக இருக்குமட்டும்
என்னுடம்பில் நோய் வராது!
பிள்ளையாரின் வாகனமே
கள்ளமில்லா எலியாரே பக்கவாட்டில்
நித்திரையில் நீர் கடித்த
கடியொன்று
நான் பலம் குன்றிப் பொல்லொன்றைத்
தேடுகையில் என் மெய்யதனைத்
தாக்கி விழ வைக்கப் போகிறது!
நித்திரையில் கடித்த எலிப்பிள்ளை நெஞ்சுக்கு
சத்தியமாய் நான் சாவாகப் போவது
காதில் விழப்போகிறதா?

வல்லரசு ஒன்றாகிப் போய்ப் பலம் மிகுந்து
ஏழேழு உலகத்தில் குடியேறி நின்றாலும்
நீரோடு நிற்கும் கடல் பரப்பு அத்தனையும்
மண் போட்டு மூடுதல் அன்னார்க்குச்
சாத்தியமோ?

திங்களுக்குச் செவ்வாய்க்கு புகழ் மிகுந்த
புதனுக்கு வில்லங்க வியாழனுக்கு
சுபக்கிரகம் வெள்ளிக்குக் கையைக் காலை
உடைக்கின்ற சனிக்கு,விண் ஒடம்
அனுப்புகிற பெருந்தகையீர்,சூரியர்க்கு
அனுப்புவீரோ?

உங்களுக்குத் திறன் இருந்தால் அவ்
விடத்தில் அனுப்பிடுங்கோ?



# அன்றொரு நாள் கவிஞனாக நான் இருந்திருந்தால்

காவிரியில் கரைபுரண்டு ஓடியது வெள்ளமது;
ஆ அது விரிந்து கரைகளையே உடைத்ததுவே
உயரத்தொட்டு ஏ... இதுவே தருணமென வாழைமீன்
பாய்ந்ததடா! கமுகம் வட்டு!!

நீர்ப் பெருக்குக் கூடிவர,நீரர மகளிரும் இணைந்து வர
நீர்ப் பொய்கை நதிகளிலே இங்கிதமாய் நான் குளிக்க
என்ன இங்கிதமாய்க் கதிரவனும்,கதிர் எறிவான்!
மன்மதனும்,மலர்க்கணையை தானெறிவான் தன்பாட்டில்!

இந்நாளில் மழை குறைந்து விட்டதனால்
அந்நாள் போல் இல்லையடா,பொய்கையெல்லாம்!
அரையடியில் காட்டுதடா தண்ணீர் மட்டம்.
தண்ணீர் இல்லாக் காரணத்தால்,தம்பிமார்
தலைகளுமோ மயிர் இன்றித் தோல்மட்டம்!
இந்நிலையில் எங்குதான் நான் போவேன்;
நீராடப்,புனலாட?

கரிகாலன் வந்திடானா?
போனகாலம் திரும்பிடாதா?
இக்காலம் போர்க்காலம்
நான் வந்தேன் இழிகாலம்.

கம்பனும்,வள்ளுவனும்
இளங்கோவும் சாத்தனும்
மற்றும் உள்ள
தென்னகத்துப் புலவரெல்லாம்
ஒன்று கூடி,
சபை நடுவே நன்றாக
அரங்கேற்றம் செய்கையிலே...

சொல்லில் குற்றம் என்றாலும்
பறவாயில்லைப் பார்வேந்தே
பொருளில்தான் குற்றமுண்டு
எனச் சொல்லும்,நக்கீரனாய்
நான் வாழலாம் என்றாலும் சீச்சீ
காலம் கனிந்து வரவில்லை
என் செய்வேன்?

ஊழ்வினைக் காலமதில்
வந்து பிறந்ததினால்
எந்த இடத்தினிலும்,புகழ்
அடைய வாய்ப்பில்லை.
தூற்றியவர் போற்றுவார்
என்றிருந்தேன்;புகலிடத்தில்
தூற்றியவர் தூற்றுகிறார்.
புழுதிக்குள்ளே தாம் கிடந்து!

மாடடித்து மாளாதென்று
யானை கட்டிப் போரடித்த
அழகான தென்மதுரை மீதிருந்தால்
பாய் விரித்துப் பட்டெடுத்து
பொன்னி அரிசிகளை அளந்திருப்பர்
காலடியில்!

பொன் அளந்து கொடாதிடினும்
என் மனையாள் கையகத்தில்
இப்பொருளை நான் கொடுக்க
வறுமை பறந்திருக்கும் வைகை
நதிக்கப்பாலே!
சே....என்ன காலமடா
பிந்திப் பிறந்துவிட்டேன்
பிழையான நாட்டினிலே!

பொக்கற்றில் காசில்லை
பழைய நண்பன் வந்தானே
என இங்கு ஏங்கி நாமே
நாற்பது ரூபாய் பார்சல்
ஒன்றில் நாலு கை நாம் வைத்து
பங்கிட்டோம்;சாப்பிட்டோம்;
இது கொடுமை!

ஐயகோ வீட்டில் மறந்து போனேன்
காசதனை!
மெய்யே.........ஒரு கடையில் சாப்பிட்டு
'காஸ் கவுண்டர்' வருகையிலே
காசில்லாச் சங்கதிகள்,அடி வயிற்றில்
சமித்ததுவே!
காசில்லை என்றால் ஏனிங்கு
வந்தீரோ?
ஹோட்டலின் உட்புறத்தே உழுந்தரைப்பீர்
என்றுரைத்தான்!
தமிழ் உரைக்கும் கவிஞன் என
நான் உரைத்தேன்!
அம்மட்டில் தன் காலெடுத்து
என் அடிவயிற்றில் அவன் உதைத்தான்!

அன்றொருநாள் அரச கட்டிலில்
படுத்துறங்கும் மோசீகரனார்
கேட்டிருப்பீர் பழம்பாட்டில்!
என் செய்வேன்?,அன்று வரப்
பிந்தியதால் ஆஸ்ப்பத்திரிக்
கட்டிலினில் நான் படுத்தேன்
அவனாலே!

என்னடா கலிகாலம்?
காவியத்தை நான் பாட
ஒவியத்தை நீ தீட்ட
வந்திடாதா பொற்காலம்?
சங்ககாலம் வறுமையதாம்
அதனகத்துப் புகுந்து விட்ட
மாக்சீய வீரரெல்லாம்
சீச்சி.....இங்குள்ள வறுமையாலே
ஈதில்லைப் பொற்காலம்
என்றுரைத்துப் பொருள் கொள்வார்!
வாய்ச்சியரே கால்மாக்சோ
வறுமையாலே கையளந்தார்!
ஏங்கல்ஸ் சார் கொடுத்திட்ட
பணத்தினிலே உலைவைத்தார்
தெரியாதோ.........தெரியாதோ.......
எனக்குங்கள் பொற்காலம்?

அழகாகச் சில பெண்கள்
எனக்காகப் பிறந்துவிட
அழகான வாலிபர்கள்
மாமாவெனச் சுழன்று வர
மடையர்களே,கோழைகளே
புலிப்பல்லைக் கொண்டுவந்து
பெண் கேட்க எனச் சொல்ல
கையோடாக் காலோடா
வாலிபத்தை நான் சிரிக்க
என் சிரிப்பில் காட்டினிலே
புலி சிரிக்க,இது கண்டு
ஊர் சிரிக்க,வந்திடாதா
வந்திடாதா எனக்கிங்கு
பொற்காலம்?

# தமிழன் நினைவு?

தனி ஒரு மனிதனுக்கு
உணவில்லை என்றால்
எனக்கென்ன?
போர் நடந்தால் எனக்கென்ன?
அது--தூரத்தில் இடி முழக்கம்.
என்வீட்டுஜன்னல்,
என்வீட்டுப் பழமரங்கள்
எதுவும் இன்னும்
முறியவில்லை.

❋

தனி ஒரு மனிதனுக்கு
உணவில்லை என்றால்
எனக்கென்ன?
உணவில்லா மனிதர் பலர்
உலகைவிட்டே போய்விட்டார்!
உணவுக்காகத் தான்,நான்
இவ்வுலகிலேயே வாழ்கின்றேன்!!

❋

போர் நடந்தால் எனக்கென்ன?
தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை
என்றால் எனக்கென்ன?
நேற்றைய நிகழ்வொன்றில்--தூரத்தில்
இடிமுழக்கம் போன்றவொரு
சத்தம் கேட்டதுதான்!
மின்சாரத்தூண்கள் பல
நிலத்தில் விழுந்ததுவாம்!!

தனி ஒரு மாந்தர்க்கு
உணவில்லை என்றால்
எனக்கென்ன?
போர் நடந்தால்
எனக்கென்ன?பெருங்கவலை
புத்தம் புது ஜேனரேட்டர்
என் வீட்டில்!

தனி ஒரு மனிதனுக்கு
உணவில்லை என்றால்
எனக்கென்ன பெருங்கவலை?
போராளி இயக்கத்தில்
என் மகனோ?
இறந்து போன ராணுவத்தார்
என் குடிமகனோ?
போர் நடந்தால்
நடக்கட்டும் எனக்கென்ன
பெருங்கவலை?

இந்த நிலை இங்கு
தொடர்கதை போல்
வந்து போனால்
பணவீக்கம் வரும்
என்று பக்கத்து வீட்டார்
சொன்னது தான்!

ஆனாலும் என் மகன்
இங்கில்லைக் கண்டீரோ?
ஆங்கிலேய நாடொன்றில்
அவனிருந்து அனுப்பும் பணம்
ஒன்றுக்கு பத்தாகி
ஶ்ரீ லங்கா ஒலியெழுப்பும்!

தனி ஒரு மனிதனுக்கு
உணவில்லை என்றால்
எனக்கென்ன பெருங்கவலை?
40 மைலுக்கப்பால் ஆமி முகாம்
அங்கிருந்து அடிக்கும்'ஷெல்'
என் வீடு வந்தா குடி எழுப்பும்?
தென்னை,பனை என்று
எத்தனையோ தடுத்துவிடும்
பூங்காவனம்தான் புழுகவில்லை
என் வீடு?
தேங்காய் விலை ஏறின்
எனக்கென்ன பெருங்கவலை?
என் வீட்டுத் தேங்காயும்
விலை ஏறி,என் வீட்டில்
காசுமலை வந்து
புரளுமடா!
ஓமந்தை,கிளிநொச்சி கரிப்பட்டை
நெடுங்கேணி......இப்படியே பல
ஊர் ஒழிந்து,எம்மஇனம் அழிந்தாலும்
என் வீட்டுக் கதியால் இன்னும்
முறியவில்லை.

வன்னியிலே நோய் கொண்டோர்
வன்னியிலே மாளட்டும்!
என் சொந்தம் எவரும் அங்கில்லைக்
கண்டீரோ!
ஆனதனால் எனக்கொன்றும்
பெரிதாகப்படவில்லை.
தனி ஒரு மனிதனுக்குஉணவில்லை
என்றால் எனக்கென்ன?
போர் என்றால் போர் என்று
யார் சொல்லி எனக்கென்ன?

செடி கொடிகள் என்று சொன்னால்
எனக்கென்ன பெருங்கவலை?
பூர்வீகம் இல்லையென்றால்
சொல்லி விட்டுப் போகட்டும்!
ஆபிரிக்கா,இங்கிலாந்து,அடுத்த ஊர் ஜேர்மனியில்
அங்கெல்லாம் சொல்லட்டும்........
தனி ஒரு மனிதனுக்கு உணவில்லைப்
பாரதிக்குச் சொல்லுங்கள்!
என் வீட்டுச் சேலை,என் வீட்டுச் சோலை
எல்லாம் பத்திரமாய் இருக்கட்டும்!
முற்றத்தில் நாய்படுக்க
வீட்டின் பின்புறத்தில்-
ஆடு,மாடு அழகாய்ப்
படுத்திருக்க
எடுத்த சுங்கான்
எரிந்து விழ

அடுத்த சுங்கான் மனைவி தர
எத்தனையோ இருக்குதிங்கு
இன்பசுகம்!ஆனதினால்
தனி ஒருவர் கவலையினை
எனக்கிங்கு சொல்லவேண்டாம்
போர் நடந்தால் எனக்கென்ன?
தூரத்தில் நடக்கட்டும்
வெடிகள் சுடும் நேரமதில்
பெடிகள் இல்லாம் தம் கவலை!

இசை எழுப்பிக் குறட்டைவிடும்
நேரமதில் எனக்கிராத
என் கவலை?
போர் நடந்தால் நடக்கட்டும்
உரிமையொன்று வேணும்தான்.
ஆனாலும் எனக்கென?

# பறக்கும் தட்டு

கேட்காதா ஒரு செய்தி
சேட்டம் பத்திய செய்தியா?
பறக்காதே அத்தட்டுப் பதிவாக
இறங்காதோ இத்தட்டு வடகிழக்காக?
இரண்டடி மனிதர்களே இவ்விடத்தில்
இரவிரவாய் நீர் இறங்கிப் போகையிலே
தமிழ் மொழியைப் பேசிக்கொண்டு
அமிழ்தினும் இனிய இம்மொழியே
எங்கள் முப்பாட்டன் கண்டமாம் குமரியிலே
தங்களுக்குள் பேசினார்கள் என்று நீங்கள்
தக்க உரை செய்து சந்தியிலே
தமிழ் முழக்கம் செய்யீரோ?
அமெரிக்கரென்றாலும், இந்தியரே
என்றாலும், பெரும் கொடுமைஸ
செய்தோந்த பேரினத்தார்
என்றாலும் பொது மக்கள்
வாழ்விடத்தில் குண்டெறிந்தால்
அவர்களின் சார்பாகப் பறக்குமாம்
எங்கள் பறக்கும் தட்டென மார்தட்டி
உம் வீட்டில் குண்டு பல
போட்டு அழித்தொழிப்போம்
என்றின்று சொல்லீரோ?
ஒரு சிறந்கைத் தமிழினத்தை
அழிப்பதற்கு எத்தனையோ வித்தைகளை
இவ்விடத்தில் செய்கின்றார்
பேரினத்தின் விழிதொட்டு?
பறக்கும் தட்டே! பச்சைத்தமிழனே,
எம் வீட்டில் குண்டுகளை
எவர் ஏவி நின்றிடினும்
அவ்விடத்தில் இறங்காயோ
குண்டோடு?

# போர்வை

முள்ளிலே பல வகை
இலந்தை முள் ஒரு வகை
அவ்விடம் சீலையைக்
கொழுவிடில், கொழுவிடில்
சீலையை இலந்தைக்குக்
கொடுக்கலாம் தானே?

முல்லைக்குத் தேரைக்
கொடுக்கலாம் என்றால்
முள்ளுக்குச் சேலையைக்
கொடுக்கலாம் தானே?

கல்லுக்குள் தேரை
இருப்பது என்றால்
கல்லினைத் தேரைக்குக்
கொடுக்கலாம் தானே?

மயிலுக்குப் போர்வை
கொடுக்கிறான் பேகன்
குயிலுக்கும் போர்வை
கொடுக்கலாம் தானே?

தகுதியை அளந்து
போடுங்கள் போர்வை – இது
கவிதேசம் சொல்லும்
தகுதிப் போர்வை!

## நூலாசிரியர் பற்றி....



கவிஞர். **திக்கவயல் தர்மகுலசிங்கம்** ஒரு அபூர்வமான படைப்பாளி. இவர் படித்த துறை வேறு; பிரகாசிக்கும் துறைகள் வெவ்றே. வரலாறு பலவாறு; வரலாற்றுத் துறையின் சிறப்புப் பட்டதாரியான இவர், ஓரு பத்திரிகை ஆசிரியர் எழுத்தாளர் ; கவிஞர் சுவைத்திரள் என்ற நகைச்சுவை ஏட்டினதும் கவிதேசம் கவிதைச் சஞ்சிகையினதும் ஆசிரியர் .

வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, சிரித்திரன் ஆகிய ஆசிரிய பீடங்களில் சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியஇவர் தினகரன், ஈழநாடு, உலகத்தழிழர் குரல் (கனடா) ஆகிய பத்திரிகைகளில் பெருமளவான கவிதைகளையும் கட்டுரைகளையும், இலக்கிய விமர்சனங்களையும் படைத்துள்ளார்.

தமிழீழத் தேசிய வீரர் கவிதைப் பரிசு (மன்னார் மாவட்டம்) அமரர் செல்வநாயகம் ஞாபகார்த்தக் முதல் கவிதைப் பரிசு (மன்னார் மாவட்டம்) சமாதானம் சஞ்சிகையின் கவிதைப் பரிசு (மருதமுனை) என்பன இவர் பெற்ற சில பெறுமதியான கவிதைப்பரிசுகளாகும் பல்துறை விற்பன்னரான இவர் வரலாற்றில் தமிழும் தழிழரும் (வரலாறு) மார்கசீயம் (டைலரின் மொழிபெயர்ப்பு) தத்துவப்படகு (தத்துவம்) என்ற நூல்களை வெளியிட்டு உள்ளார் சிந்தனைப் பேராளி சிரித்திரன் சிவஞானசுந்தரம் என்ற நூல் வெளியீட்டில் (கண்டி) மத்திய மகாணக் கல்வி அமைச்சர் ராதாகிருஸ்ணன் இவருக்கு **"இலக்கியச்சுடர்"** என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

திக்கம் என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சி. தர்மகுலசிங்கம் தொழில்ரீதியாக ஒரு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்; மட்டக்களப்புக் கச்சேரியில் இவர் தொழில் புரிகிறார் இவரின் சிந்தனைக்கும் செயலுக்கும் தொழிலுக்கும் எட்டாப் பொருத்தம் இருப்பதை எவரும் அவதானிக்கலாம்!

நான் வாழும் காலத்தில் சில வரிகளை எழுத வேண்டும் என்பதே தனது மன ஆதங்கம் என்கிறார் கவிஞர், மற்றும் கம்பனாக இளங்கோவாக வாழும் தகுதி தமக்கு இல்லை என நகைச்சுவையுடன் குறிப்பிடும் திக்கவயல். தர்மகுலசிங்கத்தின் இந்த முதல் கவிதைநூல் பல கவிதை நூல்களாகத் தொடர எனது வாழத்துக்கள்.

**பாலமனோகரன்; ஆசிரியர்**
**மட்டக்களப்பு அரசினர்**
**ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி**

**வணசிங்கா பிரிண்டர்ஸ், 126/1 திருமலை வீதி, மட்டக்களப்பு**